ஓம்

திருச்சிற்றம்பலம்.

# செந்தமிழ்ச் செல்வி

திருநெல்வேலித் தென்னிந்திய

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினின்றும்

திங்கள் தோறும் வெளிவருவது.

| | | |
|---|---|---|
| சிலம்பு உ. | மெய்கண்டான் ஆண்டு-எாக வைகாசித் திங்கள் 1924ஹு மே—ஜுன்மூ | பரல் ரு. |

திருச்சிற்றம்பலம்.

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

---

## திருஞானசம்பந்தர் தேவாரம்
## இயற்கைப்பொரு ளழகு

(ாருசு-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிர் நிறங்களை அணிபெற அமைத்துக் காட்டுந் திறம் நமது ஆசிரியர் திருப்பாடல்களிற் பொலிந்து விளங்கும். கரு முகிலின் வெண்டுளியும், வெண்டாமரையில் கருவண்டும், கருங் குருந்தினருகே செவ்வாழையும், பசுங்கமுகின் செங்கனியும்,

புன்னையினது வயிரக்கிளியின் பொற்பூவும், இரவிருள் நீக்கும் வெண்முத்தமும், கருங்குன்றேறும் செம்முகக் குரங்கும், வெண்முகில் அளாவும் கரும்பனைமேல் பசுங்கிளியும், தேன் தோய்ந்த செங்கழுநீர்த்தாதிற் புரண்டு கருநிறமாறிச் செந்நிறமாய வண்டும் திருப்பாடல்களுட் பலவிடத்தும் பயில்கின்றன.

காட்சிப்பொருளினுடைய நிறங்களின் ஒற்றுமை வேற்றுமைகளேயன்றி அவற்றின் வடி வமைப்பும் உள்ளத்திற்கு இன்பந் தருகின்றது. ஆதலால் அதனையும் பல இடங்களில் ஆசிரியர் நலமுறப் புணர்ந்துள்ளார். யானைக்கொம்பனைய தாழம் பூவும், பாம்பின் முள்ளெயிறுபோன்ற முல்லையரும்பும், யானைத் துதிக்கைபோன்ற வாழைக்குலையும், அனைய பிறவும் ஆசிரியர் தேவாரத்தில் மலிந்துள்ளன. உயிரில் பொருள்களிடத்தே மக்கள் உறுப்புக்கள் பலவற்றின் நயம் ஒருங்கே யமைந்த பான்மை ஆசிரியரது பொய்கை வருணனையில் இனிது விளங்கும்.

"வாவிதொறும் வண்கமல முகங்காட்டச்
செங்குமுதம் வாய்கள்காட்டக்
காவியிருங் கருங்குவளை கருநெய்தல்
கண்காட்டுங் கழுமலமே"

என்ற அடிகளில், தடாகங்களிலே தாமரைகள் முகங்கள் போலவும், செவ்வாம்பல் வாயிதழ்கள்போலவும், குவளையும் நெய்தலும் இரு கண்கள்போலவும் விளங்குதலாலே வாவியானது மகளிர் திருமுகத்தை நினைவூட்டுந் திறத்ததென்பது குறிக்கப்பட்டது. இயற்கைப்பொருள்களுள் நலமுடைய பலவும், செறிவானும், இடவமைதியானும் காட்சி நயஞ் சிறந்து உள்ளங் கவருந் திறத்தனவாகும். மரங்கள் பலவற்றுள்ளும் அழகுடைய சிலவே பாட்டுக்களிற் பயிலுதற் குரியன. அவற்றுள், தெங்கு, கமுகு, வாழை, மா, பலா, கோங்கு, வேங்கை, கரும்பு முதலியன் தோற்றத்தாலும், பயனாலும் உள்ளத்திற்கு இன்பம் பயப்பன. சண்பக மரம், மகிழ மரம் முதலியன நறுமணத்தால் அக மகிழ்விப்பன. இத்தகைய மரங்கள் பெயர் கூறிய அளவிலேயே உள்ளத்திற் பொலிந்து தோன்றி எண்ணத்தை

மகிழ்விக்குந் தன்மையவாதலால் அவற்றைத் தொகுத்துக் கூறு தல் நல்லிசைப் பாட்டுக்குச் சிறந்த ஓர் உறுப்பாகும்.

உதாரணம்:—

"தெங்கொள் பூங்கமுகு தெங்கிளங் கொடிமாச்
செண்பகம் வண்பலா இலுப்பை
வேங்கை பூமகிழால் வெயிற்புகா வீழி
மிழலையா னென வினைகெடுமே"

"பொழிலார்தரு குலைவாழைக ளெழிலார்திகழ் போதின்"

"வாழையம் பொழின் மந்திகள் களிப்புற மாவும் பூகமுங்
கதலியும் நெருங்கிய மாதோட்டம்"

"கந்தமார் கேதகைச் சந்தனக் காடுசூழ் கதலிமாடே
வந்துமா வள்ளையின் பவரளிக் குவளையைச் சாடியோட"

"மழையார் சாரல் செம்புனல் வந்தங் கடிவருடக்
கழையார் கரும்பு கண்வளர் சோலை"

"மானேறு கொல்லை மயிலேறிவந்து குயிலேறு சோலை மருவித்
தேனேறு மாவின் வளமேறி யாடு திருமுல்லைவாயி லிதுவே."

இனி, வயல்களும், தோப்புக்களும், குளங்களும், மாளிகை களும் ஒரு நிரலாக அமைந்து நகரங்களுக்கு அழகு செய்யும் பான்மையை ஆசிரியர் மிகச் செம்மையாகப் பல இடங்களில் விளக்கியுள்ளார்.

உதாரணம்:—

"நீருளார் கயல் வாவிசூழ் பொழினீண்ட மாவய
லீண்டு மாமதிற்—றேரினார்மறு கில்விழா மல்கு திருக்களர்"

இத் தேவாரவடிகளிலே, தண்பொய்கைகளைச் சூழ்ந்து பொழில் கள் மிகுந்திருப்பதினாலே மரங்கள் நீருள் தோன்றுங் காட்சி நயம் குறிப்பிக்கப்பட்டது. பொழில்கள் மதிலுக் கருகில்

இருப்பின் மதிலின் எடுப்பு செம்மையாக விளங்காதாகலின் பொழிலுக்கும் மதிலுக்குமிடையே அழகிய வயல்கள் அமையப் பெற்றன. பொழில் மரங்கள் நகரத்திற்கு இயற்கை யெல்லை போலவும், மதிற்சுவர்கள் செயற்கை யெல்லைபோலவும் விளங்கு வது சுட்டப்பட்டது.

பொய்கைகளில் பொழில்கள் தோன்றும் காட்சிபோலவே அவைகளில் மாளிகைகளின் சாயல் தோன்றுங் காட்சியும் இன்பந் தருவதாதலால் அதனையும் ஆசிரியர் சில இடங்களில் கூறியுள்ளார்.

"வாய்த்த மாளிகை சூழ்தரு வண்புகார் மாடே
பூத்த வாவிகள் சூழ்ந்து பொலிந்தசாய்க் காடே."

இனி, குளங்களுக்கு அழகு பல்வகை நறுமலர்களும் அவற்றின் தேனைக் கவரவரும் வண்டினதும் மீனைக் கவரவரும் பல்வகைப் பறவைகளினதும் தோற்றமுமாதலால் அவற்றையும் பலவிடங்களில் தொகுத்துக் கூறியுள்ளார்.

உதாரணம்:—

"கள்ளார் நெய்தல் கழுநீராம்பல் கமலங்கள்
புள்ளார் பொய்கைப் பூப்பல தோன்றும்"

நகைச்சுவையை விளக்கும் இயற்கைப் பொருளின் செய்திறங்களைக் கூறும் செய்யுட்கள் அளவிலா நயமுடையன. பொழிலகத்தேயுள்ள நெடிய தெங்குகளினின்று விழுங் காய்கள் பாக்குப் பழங்களை உதிர்க்க அவை கீழே விழுங் காலத்தே வாழைப்பழங்களைப் பொய்கைகளிலே உதிர்ப்பதால் அச்சமெய்திய வாளை மீன்கள் தாமரை மொட்டுக்களைத் தாக்கி அவற்றின் பாங்கிலுள்ள தவளையின் வாயில் தேனைச் சொரிவித்ததலாகிய நயம் கற்பவர்க்கு அளவில் இன்பந் தருவது.

இனி, செவிக் கின்பம் பயக்கும் இனிய ஓசைகள் பயில்கின்ற திருப்பாசுரங்கள் ஆசிரியர் திருப்பதிகங்களிலே மிக்

குள்ளன. ஒலியாற் பொருள் குறிக்கும் சொல்நயம் அவைகளில் மலிந்து காணப்படும்.

உதாரணம்:—

'தண்ணிதாய வெள்ளருவி சலசலநுரை மணிததும்ப'

'வெண்ணிறத் தருவிக டிண்ணென வீழும்'

'தந்தத் திந்தத் தடமென்ற ருவித்திரள் பாய்ந்து'

அருவியின் முழக்கம் மணப்பறை முழக்கமாகவும், குயிலின் குரல் குழலொலியாகவும், வண்டின் இம்மென்ற மெல்லோசை செவ்வழிப் பண்ணாகவும் உருவகித்துக் கூறிய பகுதிகள் பல.

தண்ணிய நறும் பூக்களின் வாசனையால் மகிழ்ந்து பாடும் குயிலோசையும், பெண்களது கிளிமொழியும், வீணையின் இசையும், பிற இசைகளும் கலந்து எழுகின்ற ஓசைச் சீர்மை அவற்றின் ஒற்றுமை வேற்றுமை நயங்கள் விளங்கும் வண்ணம் அமைத்துக் காட்டிய செய்யுளடிகள் பின்வருமாறு காண்க.

"வாசமலர் கோதுகுயில் வாசகமும் மாதரவர் பூவை மொழியும்
தேசவொலி வீணையொடு கீதமலி தேவூரதே"

தேனூறும் தமிழ்மொழியானது இனிய குரல் உடைய மாதர்கள் நாவில் பயில்வதால் இயற்கை யினிமையொடு செயற்கை யினிமையும் பெற்றுத் திகழ்தல் ஒரு நயம். அதனோடு அம் மாதர் மழலைச் சொல்லும் பிறநாட்டு ஆடவர்கள் மரக்கலங்களில் வந்து தங்கி தமது தொழிலின் பொருட்டுத் தமிழ்மக்களிடத்தே பேசும் வழூச்சொல்லும் முறையே இன்சுவைக் கனிவும், நகைச் சுவைப் புதுமையும் கலந்தூட்டி இன்பம் பயக்கும் அழகு பின்வரும் அடிகளிற் காண்க.

'ஊறு பொரு ளின்றமி ழியற் கிளவி தேரு மடமாதருடனார்
வேறு திசை யாடவர்கள் கூறவிசை தேருமெழில் வேதவனமே'

இனி, மாடுமேய்க்கும் ஆயன், காணாது மறைந்து நின்ற கால் நடைகளைக் குழலூதுவதனால் தான் நிற்கு மிடத்தே ஈர்த்துக் கொள்ளும் நயத்தினை,

" கனைத்த மேதி காணா தாயன் கைமேற் குழலூத
அனைத்துஞ் சென்றங் கணையுஞ் சோலை யண்ணாமலையாரே "

என்ற அடிகளிற் பெறவைத்தனர்.

கண்ணிற்குஞ் செவிக்கும் ஒருங்கே இன்பம் பயக்கும் காட்சி நயங்கள் சில திருப்பாட்டுக்களில் இயைந்து தோன்றும். கண்க ளடர்ந்த அழகிய தோகையையுடைய நீல மயிலானது வண்டு இன்னிசை முரலவும், கடலும் மேகமும் பெருமுழக்கஞ் செய்யவும், திருவெண்காட்டு வானளாவிய சோலைகளிலே நடனஞ் செய்யுங் கண்கவர் காட்சியானது அணையதன்மைத்து.

' கண் மொய்த்த கருமஞ்ஞை நடமாடக் கடல் முழங்க
விண் மொய்த்த பொழில்வரி வண்டு இசைமுரலும் வெண்காடே '

இனி, கனிகளின் இனிய ரசமும், அதனினுமினிய தேனும் எப்பொழுதும் நாவினில் சொட்டிக் கொண்டிருக்கும் பொழில் நீழலிலே சிறிது அமர்வோமாக.

' குலைவாழைத் தீங்கனியு மாங்கனியுந் தேன்
பிலிற்றும் குறும் பலாவே '

' பாடெலாம் பண்ணையின் பழம்விழப் பைம்பொழின்
மாடெலா மல்கு சீர் மாமழ பாடியே '

" பெய்பூம் பாளை பாய்ந்திழி தேறல் பில்கு பெருந்துறையாமே "

" நலமஞ்சுடைய நறுமாங் கனிகள் குதிகொண்டெதி ருந்திப்
பலவின் கனிகள் திரைமுன் சேர்க்கும் பழன நகராரே "

‘ கொக்கினிய கொழும் வருக்கை கதலிகமு
குயர் தெங்கின் குலை கொள் சோலை
முக்கனியின் சாறொழுகிச் சேறுலரா
நீள்வயல்சூழ் முது குன்றமே’’

மூக்கினால் மோந்து நுகரும் இன்பத்தை நினைவூட்டும் செய்யுட்கள் பல. பூந்தேனின் புதுமணத்தான் மாத்திரமல்லாமல் வகுளம், செண்பகம், மல்லிகை, காந்தள், செருந்தி, தாழை முதலிய நன்மலர்களின் நறுமணத்தானும் ஆசிரியரது பாடல்கள் நிறைந்துள்ளன. அவை பின்வருஞ் செய்யட்களால் தெளிவாகும்.

‘ கோடுமலி ஞாழல் குர வேறு சுரபுன்னை
நாடுமலி வாசமது வீசிய நள்ளாறே’’

‘ மரவத் தொடு மணமாதவி மவ்வ லதுவிண்ட
குரவத் தொடு விரவும் பொழில்’

‘ எண் டிக்குங் கமழ்ந் திலங்கு சந்தனக்
காடார் பூவார் சீர் மேவும்.’’

உடம்பிற் படுதலால் இன்பம் பயக்கும் பொருள்களின் சிறப்பும் ஆசிரியரது தேவாரங்களிற் பொலிவு பெறக் காணலாம். உயர்ந்த மலைகளிலும், தாழ்ந்த பள்ளத்தாக்குக்களிலும், மருத நிலப்பொழில்களிலும், கடற்கரைக் காவுகளிலும் பரவிச்சென்று அங்குள்ள நறுமணங்களைக் கவர்ந்து வந்து தாமரைப்பூவின் பொற்பொகுட்டில் வீற்றிருக்கும் காதல் தூதாகிய அன்னத்தைத் துயில்கொள்ளும் வண்ணம் தாலாட்டும் இளந்தென்றலைப் பற்றிய வருணனை படிப்பவரது உள்ளத்தையும் உடலையும் குளிர்ந்து மிளரச் செய்யும் பான்மையது.

தமிழ்ப்பா நயம் நன்கு விளங்கும் திணை யொழுக்கத்திற்கும் திணைமயக்கத்திற்கும் சிறந்த எடுத்துக்காட்டுக்கள் ஆசிரியரது தேவாரங்களில் மலிந்துள்ளன. பாவிற் சொல்லப்படும் பொருள் அது தோன்றும் இடத்திற்கு ஒத்ததாக அமைய

வேண்டுமென்பது திணையொழுக்கத்தின் சீர்மையதாகும். ஓரே நிலத்தில் பல நிலத்து வெவ்வேறு பொருள்களும் கலந்து தோன்றுவதாலும் சிறப்பாக இன்பந்தருவதாலும் கற்பனை நயத்திற்கு இடந்தருவதாலும் திணைமயக்கமானது செய்யுட்கு ஓர் சிறந்த அணியாக அமைந்துள்ளது.

கடற்கரைத் தோப்புக்களில் புன்னை மரங்களும் தாழை மடல்களும் செறிந்து மணம் வீசுவதும், மணிகளும் மீனோடுகளும் அலைகளினின்று கரையில் ஒதுங்கி வருவதும் பல இடங்களில் பரக்கக் காணலாம்.

நாரையும், அன்றிலும், குருகும் அவை போன்ற நெய்தல் நிலப்பறவைகள் பலவற்றின் வருணனையும் பல பாடல்களிற் காணலாம். பவளங்களும் முத்துக்களும் தாழை மடலினும் செழிப்புள்ள புன்னை மரத்தின் நிழலினும் விரவிக் கிடப்பதும் அன்னங்கள் தங்கள் பெண்பறவைகளோடு அவற்றினடுவே விளையாடுவதும் கடற்கரையின் கண்ணுள்ள இயற்கைச் செல்வ வளத்தை இனிதெடுத்துக் காட்டுகின்றது.

‘மடலிடைப் பவளமும் முத்தமுந் தொத்துவண்
புன்னை மாடே
பெடையொடுங் குருகினம் பெருகுதண் கொச்சையே
பேணு நெஞ்சே’

‘பாரல் வெண் குருகும் பகுவாயன நாரையும்
ஆரல் வெண்டிரை வாயிரை தேரும்’

‘வண்டலம் வங்கமுஞ் சங்கமுஞ் சுறவு மறிகடற்
றிரை கொணர்ந் தெற்றிய கரை மேற்
கண்டலுங் கைதலு நெய்தலுங் குலவும்’

நெய்தல் நிலப்பெண்கள் தாழையினது வெண்மடலைக் கொய்து விளையாடும் வனப்புத் திருச்சாய்க்காட்டுத் தேவாரத்தில் வியக்கப்பட்டிருக்கிறது.

(தொடரும்)

கா. சுப்பிரமணிய பிள்ளை, M.A., M.L.

# நூலாராய்ச்சி

III

(௭௭க-ம் பக்கத் தொடர்ச்சி)

## கோயில்

மக்கள் வழக்கில் பெருந்தகையினரைப் பெயர் கூறாது பண்புநலம் பற்றி வகுப்புப் பெயரா லழைத்தல்போன்று சீருஞ் சிறப்பு மெய்திய கோயில்களிற் சிறந்ததான சிதம்பரத்தைத் திருக்கோயிலென்றே முதியோ ரழைக்கின்றனர். தில்லைவன மென்றும், தாருகாவன மென்றும் பெயர் பெற்ற வனத்தில் இக் கோயில் அமைந்ததனால் 'தில்லை' யென்னும் பெயரும் அதற் கமைந்துளது. தமிழ்மக்கள் அடுக்கிய தொன்மையில் மரத்தி னடியையே இறைவ னிருப்பிடமாகக் கொண்டன ரென்பது எவரு மறிந்ததே. பலா, வேய், கடம்பு, மருது, தில்லை, மகிழ், குருந்து, ஆல், நாவல் முதலான மரங்கள் இவ்வகையில் புகழ் பெற்றுள. தில்லையடியில் தோன்றிய பெருமானை வழிபட்டார் புலிக்காலர் (வியாக்கிரபாதர்), தாள வணங்கி தளராத் தாளினன் (பதஞ்சலி) எனப்பட்ட முனிவர்கள். இவ்விருவரில் முன்னவர் பெயரால் இவ்வூர் புலியூரென்று வழங்கலாயிற்று எனலாம். இஃது ஆகாச வெட்டவெளியில் ஆடும் சித், சிவமானதனால் சிதம்பர மெனவும் பெயர் பெற்றது என்பர். கூத்தனுறையும் அம்பலம் சிறிதாயிருந்தமை பற்றி 'சிற்றம்பல'மென்றும், புலியூரி லமைந்ததனால் புலியூர்ச் சிற்றம்பலவன் என்றும்,

> "தூயசெம் பொன்னினா
> லெழுதிமேய்ந்த சிற்றம்பலம்"

செம்பொனம்பல மென்றும், கனகசபை யென்றும் பலவாறு பெரும் புகழ் பெற்றது. பல அரி, அரன் கோவில்கள் அமைத்த கோச்செங்கண்ண ரென்ற சோழவரசரே தில்லையிலும் ஏறக்குறைய பதின்மூன்று நூற்றாண்டுகளின் முன் திருக்கோயி லமைத்து வழங்கின ரென்ப. சிதம்பரம் நெஞ்சம் (இருதயம்,

இதயம்) ஆகிய நடுவிடமென்பர். உடலினுக்கு நெஞ்சமெத் தன்மைத்ததோ அதுபோன்றே கயிலைக்கும், கன்னிக்கும். இலங்கைக்கும், இமயத்திற்கு மிடையே யமைந்துள்ள கோயில் களுக்கு சிதம்பரம் நடுத்திருவிட மென்பர். திராவிடமாகிய இத் திருவிடத்தில் திருக்கோயில்கள் மல்கியுள, வட நாட்டிலோ இவை சிலவேயாம். 'அக' வொப்புமையை யுற்று நோக்கின் அஃது அத்துணைச் சிறந்ததன் றென்பர். வடபால் பண்டுருட்டிக் கடுத்த திருவாமூர், திரு அதிகை, பாதிரிப் புலியூருக்கும், தென் பால் காழிக்கு மிடையேயுள்ளது தில்லைச் சிற்றம்பலமாம். சைவ ராய்ப் பிறந்து பாடலிபுரமென்ற திருப்பாதிரிப்புலியூரி லிருந்த சமண்பாளி யடைந்து தருமசேன ரென்ற பெரும் பேர் பெற்றுப் பின் அதனை யொழித்தத னிமித்தம் சமணரசர் கொடுமைக் காளாய்ச் சிவன் கருணையெய்தி கடைத்தேறியவர் திருநாவுக் கரையர். ஞானப்பா லருந்திய ஆளுடைய பிள்ளையாரோ சம ணரை வாதினில் வென்று சைவநெறி தழைக்கச் செய்தவ ரன்றோ. இவ்விரு பெருஞ் சைவப்பெரியா ரிருப்பிடங்கட் கிடையேயுள்ளது சிதம்பரமாம். இது பல்லவராயன் நாட்டி லுளது. பல்லவ மன்னரி லொருவன் ஐயடிகள் காடவர்கோன்,

"வையநிகழ் பல்லவர்தங் குலமரபின் வழித்தோன்றி
வெய்யகலி யும்பகையு மிகையொழியும் வகையடக்கிச்
செய்யசடை யார்சைவத் திருநெறியா லரசளிப்பா
ரையடிக ணீதியா றடிப்படுத்துஞ் செங்கோலார்"

இவர் புலியூர் "திருத்தனார் திருக்கூத்து நேர்ந் திறைஞ்சிய நெடுந்தகையார், விருப்பினுடன்" வண், செம், இன் தமிழில் வெண்பாமலர் புனைந்துளர். குணபரனென்ற மகேந்திரவர்மன் சமணப்பாளிகளை யிடித்து அவற்றின் கற்களைக்கொண்டு குண தரவீச்சரக் கோயிலை யாக்கி யளித்த பெருமான், இவர் பல்லவ ராயன் அன்றோ? இவ்வாறு புத்த சமண மதத்தின் சீரினைக் குலைத்துச் சைவநெறியை விளங்கவைத்த திருவிடம் சிதம்பர மானது பற்றி அதனில் ஆக்கல், போற்றல், அழித்தல், அளித் தல், போக்கலாகிய வைம்பெருந்தொழிலை யியற்றுந்தாணுவை,

நீதியை, நிறைவை, சோதியை, பரஞ்சுடரை, சதுரரை, தழற் பிழம்பை, அம்பலக்கூத்தனை மறந்துய்வனோ வென்றும், பேசாத நாளெல்லாம் பிறவாநாளே யென்றும் மூவர் தேவாரங்களிலு மேத்தி யிருத்தலைக் காண்கின்றோம். மணிவாசகப் பெருமானும்,

"நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
வேலை வென்னை யீங்கொழித் தருளி
யன்று டன்சென்ற வருள்பெறு மடியவ
ரொன்ற வொன்ற வுடன்கலந் தருளியு
மெய்தவந் திலாதா ரெரியிற் பாயவு
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத நாத வென்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரமநா டகவென்
றிதஞ்சலிப் பெய்த நின் றேங்கவு
மெழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினி னடநவில்
இறைவன்"

என் றேத்தியுளார். புத்த வரசனுடைய ஊமை மகளைப் பேச வைத்த திறத்தினை வியந்து அவன் சைவநெறியைக் கடைப் பிடித்தனனென்ற வரலாற்றை யறியாதாரெவ ருளர். சில நூறு ஆண்டுகட்குப் பின்னர் பதிகம்பாடிய சுந்தரமூர்த்திகளும்,

"மண்ணுலகங் காவல்பூண்ட வுரிமையாற்
பல்லவர்க்குத் திறைகொடா
மன்னவரை மறுக்கஞ் செய்யும்
பெருமையாற் புலியூர்ச் சிற்றம்பலத்
தெம் பெருமானைப் பெற்றாமன்றே"

என்று பாடிப் புகழ்ந்தனர். சமணப்பாளிகள் நிறைந்த திருவா ரூரில் கண்ணிலாத் தண்டியடிகள் கண்பெற்றுச் சமணக்குழாங்

க்ளை யோட்டிய வரலாறு தமிழமக்கள் அறிந்ததே. அதன் பின்னர் வந்த சேக்கிழாரும்,

"மோடுடைய சமணர்க்கும் முடையுடைய
சாக்கியர்க்கும் மூடம்வைத்த
பீடுடைய புலியூர்ச் சிற்றம்பலப் பெருமானை"

பெரிய புராணத்தால் வழுத்த முயன்றதன் காரணம் அவர் காலத்திலும் வழங்கிவந்த சமண நூல்களைப் படித்து வியந்த அநபாயச்சோழனை சைவத் திருநெறிவிட் டகலாதிருத்தற் பொருட்டேயாம். இது நிற்க.

திருச்சிற்றம்பலம் முதன் முதலிற் கழியாற் சூழப்பட்டது. கடிபொழில் மல்கியது. பாளையுடைய கமுகும், வாளையுடைய புனலும், தேங்குநீர் வயலும் நிலமலர் பொலிந்து சூழ்ந்துள. பிற்காலத்தில் மாடமாளிகைகள் சிறந்தோங்கின. வெண்கொடிகள் பறந்தோங்கின. தேர்களுலாவின. சேனூர் வாழ்ந்தனர். மூவாயிரத் திருவா ரமர்ந்தனர், விழா மலிந்தன சிட்டர் வாழ்ந்தனர். அந்தணர், அருமறையோர், நல்லவர், கற்றவர் தொழுதேத்தினர். பூதங்கள் சூழ்ந்தன. "பொன்று மணிவிளக்குகளைப் பூதங்கள் பற்றிப் பிடித்தன. இக்கோயில் பொன்மலையில் வெள்ளிக் குன்றதுபோலப் பொலிந் திலங்கியது. தில்லைவாழந்தணர் யாவர்? சேக்கிழார் இவர் பெருமையை இவ்வாறு புகழ்ந்துளார்,

"நீற்றினு னிறைந்தகோல நிருத்தனுக் குரியதொண்டாம்
பேற்றினூர் பெருமைக்கெல்லை யாயினூர் பேணிவாழு
மாற்றினூர் பெருகுமன்பா லடித்தவம் புரிந்துவாழ்வார்"

"பொங்கிய திருவினீடும் பொற்புடைப் பணிகளேந்தி
மங்கலத் தொழில்கள்செய்து மறைகளாற் றுதித்துமற்றுந்
தங்களுக் கேற்றபண்பிற் றகும்பணித் தலைநின் றுய்த்தே
யங்கணர் கோயிலுள்ளா வகம்படி தொண்டுசெய்வார்"

"வருமுறை யெரிமூன்றோம்பி மன்னுயி ரருளான்மல்கத்
தருமமே பொருளாக்கொண்டு தத்துவ நெறியிற்செல்லு
மருமறை நான்கினோடா றங்கமும் பயின்றுவல்லார்
திருநடம் புரிவார்க்காளாந் திருவினாற் சிறந்தசீரார்"

"மறுவிலா மரபின்வந்து மாறிலாவொழுக்கம் பூண்டா
ரறுதொழி லாட்சியாலே யருங்கலி நீக்கியுள்ளா
ருறுவது நீற்றின்செல்வ மெனக்கொளு முள்ளமிக்கார்
பெறுவது சிவன்பாலன்பாம் பேறெனப் பெருகிவாழ்வார்"

"ஞானமே முதலாநான்கு நவையறத் தெரிந்துமிக்கார்
தானமுந் தவமும்வல்லார் தகுதியின் பகுதிசார்ந்தார்
ஊனமே யொன்றுமில்லா ருலகெலாம் புகழ்ந்துபோற்று
மானமும் பொறையுந்தாங்கி மனையறம் புரிந்துவாழ்வார்"

"செம்மையாற் றணிந்தசிந்தைத் தெய்வவே தியர்களானோர்
மும்மையா யிரவர்தாங்கள் போற்றிட முதல்வனாரை
யிம்மையே பெற்றுவாழ்வா ரினிப்பெறும் பேறொன்றில்லார்
தம்மையே தமக்கொப்பான நிலைமையாற் றலைமைசார்ந்தார்"

இவ்வாறு அடுபுகழெய்திய தில்லைவாழந்தணர் மற்றைய கோயில்களின் பூசாரிபோலன்று, உண்மையான அந்தணரேயாம். மானமும் பொறையும், தணிந்த சிந்தையும், தானமுந்தவமும், அகம்படித் தொண்டும், திருநீற்றின் செல்வமும், சிவன்பாலன்பும், மறைபயிலும் பெரும்பணியுஞ் சிறந்த சீராரே அந்தணராவர். அஃதன்றி மறுவியமரபும், பொருள்பற்றி மாறியவொழுக்கமும், சிவனன்பிலாது, தீக்கையும் பெறாது, கருணையின்றி வன்கணராய்ப் பிறமக்களுக்கு வேறாயாத கலிவிளைக்குங் கயவர் அந்தணராகா ரென்பது திண்ணம். முட்டாத முச்சந்தி மூவாயிரவர், அந்தணர், அறவோர், செந்தண்மை பூண்டொழுகுபவர் இவர் வேறு தற்காலக் கோயில் பூசாரி வேறு என்பதைத் தொல்காப்பியத்தாலும் கோயில் வழிபடு முறையாலும், இருவகையாரும் கொள்வது கொடுப்பதில்லை யென்பதனாலு மறியலாம். திருச்செந்திலில் மிகுந்துள்ள முக்காணியரும் தில்லை

வாழந்தணர் போன்றவரே. இவ்விருவகையாரும் கோயிலைத் தம துடைமையாகக் கொண்டு திருவழிப்பட்டுத் திருத்தொண்டு செய்து விளைபுலமின்றி வாய்ப்புலத்தால் வாழுநராவர். இவர்களுடைய நடையுடை பாவனைகள் காலத்தாற் சிறிது மாறினும் அன்னாரின் பழைய நிலைமையினை யுற்றுணர்வார்க்கு சிவன் கோயிலில் பிரமனையே வணங்கும் பூரிய ரிவரல்லர் என்பது தெற்றெனப் புலப்படும். ஆயினும் இவர்தாம் யாவர் என்ற வினாவிற்கு ஒருவாறு விடையளிக்கப் புகுவல்.

முன்னர் கூறியவாறு தில்லைவனம் சமணருக் குரியதாய், சமணமன்னர் கையதாய் எண்ணிறந்த சமணமுனிவர் வதிந்து வந்ததான இடமாம். சமணர் சாக்கியர் பீடுகுலையத் தொடங்கிய காலத்தில் சைவசமயப் பெரியாரின் பெரு முயற்சியால் தில்லை வனத்திலிருந்த சமண முனிவர்களில் மூவாயிரவர் தில்லைக்கிறையின் அருள்பெற்று அம்பலக்கூத்தனை வழிபட்டவராய் இருத்தல் வேண்டும். இவர் சமய மாறினவராதலின் இவருடைய ஆர்வத்திற்கு அளவிலா திருந்ததுபோலும். ஒருங்கே மூவாயிரச் சமண முனிவர்கள் சிவன்றாள் வணங்குவது இறும்பூதினும் இரும்பூதன்றோ? ஆதலின் அன்னார் வழிப்பட்ட கோயிலையே சிறந்த கோயிலாகக் கொள்ளப்படுவது இயல்பு. அங்ஙனங் கொள்ளப்படுதலால் பிற வமணர்களும் சைவநெறி சார வழியுண்டாம். தில்லையைத் தலைத்திருவிடமாக்கி ஏனைய திருவிடங்களை வளர்த்தலும் இயல்பு. ஒழுக்கத்திற் சிறந்து ஒழுக்க நூல்களையாக்கிய கொல்லாவிரதம் பூண்ட முனிவர்களுக்கு அந்தண ரென்ற பெயரும் முப்புரிநூலுமுள. அப்பெயராலேயே சைவ சமயத்தைத் தழுவிய சமண முனிவர்கள் தில்லைவாழந்தணர் என்று அழைக்கப் பெற்றார்போலும். இவ்வாறு சைவந் தழுவிய அந்தணர் வேறு; புலியடிகள், தாள் வணங்கியென்ற முனிவர்கள் வேறு யென்பதை "அந்தணர்களதிசயித்தா ரருமுனிவர் துதி செய்தார்" என்றவடி வற்புறுத்தும். இதுவுமன்றி மற்றொன்று எண்ணத்தகுவது. இந்தச் சைவத் தலையிடத்தினின்று தில்லை மூவாயிர வந்தணரும் கங்

கைக் கரையிலுள்ள காசி, அந்தர் வேதிக்கு அழைத்துக்கொண்டு போகப்பட்டுப் பின்னர் சிவகங்கையில் மூழ்கி வெண்குட்டம் நீங்கிப் பொன்மேனி பெற்ற இரணியவன்மப் பெருமன்னரால் சிதம்பரந் திரும்பவந் தடைந்தன ரென்றும் தவறிய ஒருவர் சிற்றம்பலவர் தாமேயென்றுங் கூறும் வரலாற்றில் புதைபொருளொன்றுளது. சமணர் குழாம் பெருகிய வடநாட்டில் மானைக் காட்டி மானைப்பிடித்தல் போன்று சைவந்தழுவிய சமணரைக் காட்டி பிற சமணக்குழாங்களைச் செந்நெறிப் படுத்திய வாற்றினையே அது குறிக்கு மென்பது புலனாம். மேலும் தில்லை வாழந்தணர்கள் வட நாட்டிலுள்ள கானாசினின்றே (காசியினின்றே) தில்லையில் குடியேறினவர்க ளென்பாருமுளர். இவ்வுரையினுண்மை ஆய்தற் பாலதாம். முன்னர் கூறியவாறு செந்திலம்பதியில் உள்ள திருவிடத்தை முதன் முதலில் முன்குடுமி, முப்புரிநூலார் மூவர்காணி யுரிமைகொண்டத னிமித்தம் முக்காணியரெனப் பெயர் பெற்று எவ்வுயிர்க்கும் எம் மரபினர்க்கும் இன்சொற் பகர்ந்து, இன்னடிசி லாக்கி யுதவி, ஈச னடித்தொண்டு செய்து வாய்விளைந்து வாழ்கின்றனர். அஃதேபோன்று இப்பொழுது 250 இல்லங்களில் வதிந்துவரும் தில்லையந்தணரும் முன்குடுமி முப்புரிநூ லணிந்து, மறையோதி, முறைப்படவொழுகி, இருபதுநாளைக் கொருமுறை இருபது தலைக்கட்டு வீதம் நன் னால்வராய் ஐந்து அவைக்கோயிலில் வாரம் ஏற்று வளமுறுகின்றனர். இக்காலத்திலுள்ள தில்லைவாழந்தணர் முற்கால வந்தணர்களின் வழித்தோன்றல்க ளென்றெனின் அன்னார் ஒழுக்கம் பற்றி அம்பலத்தாட்சி யுடைமையு முரிமையும் பெற்றிருத்தல் வேண்டும். பிறப்பினாற் பெருமை பாராட்டி ஏனைய மக்களைத் திருக்கோலம் பூண்டு மயக்கித் தங் தொழிலுக்கு ஆளாக்கி அன்னார் பொருளைத் தலைமுறை தலைமுறையாகப் பறித்துத் தம்வயப்படுத்துந் தறுகணாண்மை இன்றும் இவ்வந்தணர் காண்ட லரிது.

இதுகாறுங் கூறியவற்று ளாயத்தக்கன யாவையெனின், முதன் முதலிலிருந்த தில்லைவாழந்தணர் தமிழகத்தினர், அழ

ணராயிருந்து பின்னர் சைவமணம் பெற்ற பெரியார், சிவவழி பாட்டில் மிக்க வன்புடையார், குடியரசுபோன்று கோயிலாட்சி கொளு முறைமைக்கு எடுத்துக் காட்டாயினவர், எவ்வுயிர் மேலும் கண்ணோட்ட முடையவர், முப்புரிநூ லணியும் வேற்று மக்கட்கும் இவருக்கு மியல்பிலது எனப் பலவாம்.

உண்மை நயக்கு மறிவாளர் இவ் வாராய்ச்சி முயற்சியால் தில்லைவாழந்தணர் பெருமையை எவ்வாற்றானும் யான் இழித் துரைக்க முன்வந்திலே னென்று நினைத்துணையு மெண்ணார். என்னை எள்ளளவு மெண்ணார் என்பது உறுதி. பகுத்தறி விலாத மாக்கள் இதனைச் சிவனடியார் நிந்தனை யென்பரேல் அக்கூற்றால் அவர்தம் மடி, மடமை, மயலுறு மடிமைத் தன்மை யினை விட்டகல இயலாதவ ரென்ற வுண்மையினை நிலைநிறுத்துஞ் சால்புடையரெனக் கருதப்படுவார்.

மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை, B.A., L.T.

---

# எண்பெரும் சித்திகள்

(௱௩அ-ம் பக்கத் தொடர்ச்சி)

## பிராப்தி

தான் நினைத்த எப்பொருளையும் நினைத்தபொழுதே பெறு வது பிராப்தியாம். எம்பெருமானாலேயே அம்மேவருக என்று வரவேற்கப் பெற்ற காரைக்கா லம்மையார் தம் கணவனார் தந்த இரு மாம்பழங்களின் ஒன்றை அடியார் ஒருவர்க்கு அளித்தனராக மற்றொன்றை தம் கணவனார் உண்ணும்போது அவர்க்கிட்டார். அதன் சுவைகண்ட அக் கணவர் மற்றொன்றை யும் உண்ணக்கருதி அதனை அடியார் ஒருவர் உண்டு போனதை அறியாதவ ராகையால் தம் மனைவியாரை நோக்கி "அதனைக் கொணர்க" என்றார். அவ்வம்மையாரோ கணவனார் ஆணையைக் கடத்தற்கஞ்சி உட்சென்று 'எம்பெருமானே, என் செய்வேன்!

அருள்செய்யும் என்ற வேளையிலே இறைவனருளால் ஓர் தெய்வ மாங்கனி அவர் கரத்து வந்திருந்தது. அதனைக் கணவர் கைக் கொடுப்ப அவர் அதை உண்டு அதன் தெய்வச் சுவை கண்டு ஐயுற்று "இது நான் தந்ததன்றே. இதன் வரலாறென்னை?" எனக் கேட்ப அம்மையார் தாம் அடியார்க் கிட்டதும் இப் பொழுது இறைவனருளால் அம்மாங்கனி கிடைத்ததும் கூறினார். ஆனால் கணவனாரோ அதனை நம்பாமல் "இஃது உனக்கு இறைவனருளால் கிடைத்ததாயின் இன்னும் ஒரு கனி அவருடைய திருவருளினாலே அழைத்துத் தா" என்றார். அவ்வம்மையார் மீட்டும் உட்சென்று சிவபெருமானை நினைந்து "இன்னும் ஒருகனி தந்தருளீராகில் அடியேனுடைய சொல் பொய்யாய் விடும்" என்று தெரிவித்து நின்ற அளவிலே சிவனார் அருளால் ஒரு மாங்கனி அவர் கையில் வந்திருந்தது. அதனைக் கணவனார் கைக்கொடுப்ப அவர் ஆச்சரியத்தோடும் அதைப் பெற்று உற்று நோக்குமளவில் அது திடீரென்று மறைந்தது. இங்ஙனம் காரைக்காலம்மையார் தெய்வ மாம்பழத்தை இறைவனருளால் இருமுறை பெற்றமை பிராப்தியாம். மதுரையில் சோமசுந்தர பாண்டியனார் தமது மாமியாருக்காக எழுகடல் அழைத்ததும் இறந்துபோன மலையத்துவசனை அழைத்ததும் இச் சித்தியேயாம். கைலைமலை காணச்சென்ற திருநாவுக்கரசு நாயனார் இறைவனருளால் அக் காட்சியை திருவையாற்றில் கண்டு மகிழ்ந்தமை இப் பிராப்தியின் பயனே. இனி பிராகாமியத்தை ஆராய்வோம்.

## பிராகாமியம்

தான் விரும்பிய எத்தொழிலையும் இடையூறின்றி முடிக்தலே பிராகாமியமாம். பலவகைப்பட்ட சுத்தி வேறுபாடுகளும் இதனுள் அடங்கும். நாம் முன்னர் ஆராய்ந்த காரைக்காலம்மையார் தாம் விரும்பியபடி உடலிலுள்ள தசை முதலியவற்றை உதறி எறிந்து எலும்புருப்பெற்று தலையால் நடந்து கைலை யடைந்தமை பிராகாமியமே. பெருமிழலைக்குறும்ப நாயனார் என்ற பெரியார் சுந்தரமூர்த்தி நாயனார் திருவடிகளை வணங்

குதலே பரமசிவனுடைய திருவடிகளை அடைதற்குரிய நெறியென்று கண்டு அவ்வாறு ஒழுகுதலினாலே எண் பெரும் சித்திகளையும் அடைந்தார். அதன் பயனாக சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கைலாசத்தை வெள்ளையானைமீது ஏறி அடைவதற்கு முந்தின நாளையிலே அவ்வாறு அவர் அடையப்போவதைத் தம் மூரில் இருந்தே உணர்ந்து, “சுந்தரர் நாளைக்குக் கைலை போதலினாலே அவரைப் பிரிந்து இம்மண்ணில் நான் வாழேன், இன்றைக்கே யோகத்தினாலே சிவபெருமானுடைய திருவடியை அடைவேன்” என்று விரும்பி அங்ஙனமே உடலினின்றும் பிரிந்து இறைவன் பொன்னடிக் கமலங்களிற் சென்று பொருந்தினார். இச் செய்கையும் பிராகாமியத்தின் பயனேயாம். முருகக்கடவுளோடும் போர் தொடங்கிய சூரபதுமன் அக் காலத்துக் காட்டிய பல்வேறான விந்தைச் செயல்களெல்லாம் இப் பிராகாமியத்திலேயே அடங்குவன. இனி வசித்துவத்தை ஆராய்வோம்.

## வசித்துவம்

பிறர் உள்ளத்தைத் தன் உள்ளத்தால் கட்டிக் கவர்ந்து அவர்களைத் தன் எண்ணப்படி நடத்தலே வசித்துவமாம். நம்பியாரூரரோடும் திருவெண்ணெய்நல்லூர் சென்ற பித்தனார் தம்மை அவ் வூராரெனவும் நம்பியாரூரர் பேரனார் தமக்கு வழித்தொண்டு செய்தற்கு ஆளோலை தந்தனரென்றும் பல பேசி அவர்களுக்கு இருந்த இயற்கை உணர்வைத் தம் உள்ள வலியால் கவர்ந்து அவர்கள் யாவரும் தம் மனம்போல முடிவு செய்யும்படி செய்தருளிய விந்தை இவ் வசித்துவமே. சிதம்பரத்திலே வாதாடிய புத்தரை நம் வள்ளலார் மணிவாசகனார் மூங்கைகளாக்கி வென்று அருள்செய்த திருவிளையாடலும் இவ் வசித்துவமேயாம்

## ஈசத்துவம்

கடவுட்டன்மை பெற்று ஆக்கல் அளித்தல் அழித்தல் மறைத்தல் அருளல் என்னும் ஐம்பெரும் செயல்களைப் புரிதலே ஈசத்துவமாம். எம்பெருமான் எவ்வாறு உயிர்களை உடலிற்

புகுத்தி அவரவர் இருவினையை அவரவர்க்கு ஊட்டி வினை நீக்கி அடியவராக்கி அவைகளை முத்திக்கரையில் சேர்ப்பனே அவ்வாறே அவனருள் பெற்ற சிவயோகிகளும் அவனுக்குரிய ஐந்தொழிலையும் அவனருளால் இயற்ற வல்லவராவர். மூன்றாண்டிலே ஞானப்பா லுண்டு அருள்பெற்ற பெரியாராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் திருமயிலாப்பூரிலே பூம்பாவை என்ற பெண்ணாரணங்கின் எலும்புக்கு மீட்டும் உயிர் கொடுத்தருளினா ரன்றோ? அவ்வாறு உயிர் கொடுத்ததோடு நில்லாமல் அவர் சிவபெருமான் அருளால் அப் பெண்ணைச் சின்னாளளவும் அவ்வுடலொடு வாழச் செய்தனரல்லவா? இத் திருச்செயல்களே ஆக்கலும், அளித்தலுமாம். மற்றுமோர்கால் அப்பிரானார் எழுந்தருளி வரும்போது அவரது விருதுகளையும், சின்னங்களையும் தடுத்த புத்தன் தலையில் இடியேற்றிக் கெடுத்த அவர் திருவிளையாடலே அழித்தலாம். எம்பிரான் தோழராகிய சுந்தரனார் முதலையுண்ட பாலனை அழைத்து அவன் நெடுநாள் உலகில் வாழும்படி செய்த திருவிளையாடலும் படைத்தலுக்கும் காத்தலுக்கும் போதிய சான்றாம். இனி மறைத்தலாவது ஞானத்தை மறக்கும்படி செய்து இருவினைப் பயனை நுகர்விப்பது. நம் மணிமொழித்தேவர் திருப்பெருந்துறையை நண்ணி அருட் கடலாகிய ஐயன் திருவருள் நாடி கோவிலை வலம் வரும்பொழுது குருந்த மரத்தடியிலே சிவனார் தமது அடியாரோடும் ஞானாசிரியரால் எழுந்தருளியிருந்து அவருக்கு அருள்மொழி காட்டி ஆட்கொண்டு ‘மாணிக்கவாசக’ என்று திருவாய் மலர்ந்தருளினா ரன்றே. அப்போது மணிமொழிப் பிரானார் இறைவனிடத்து ஈடுபட்டு அன்புமயமாகி தானென்றும் இறைவனென்றும் வேறுபாடு உணராது வீட்டின்ப நுகர்ச்சியில் திளைத்திருந்தனராக கறைமிடற்றண்ணல் அந் நுகர்ச்சியினின்றும் நீக்கி அவரைத் தக்ககாலம் வருமளவும் இருவினைப்பயன் அடையுமாறு உலகத்திற் புகுத்தினார் அன்றே. இதுவே மறைத்தலாம். அருளலாவது பாசத்திலகப்பட்டு இடருற்று இறைவன் அருள்நாடி நிற்கும் உயிர்களை அவனடியின்பம் பெறச் செய்தலே. திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் தமது திருமணம் காணவந்த அனை

வரையும் திருப்பெருமணமாகிய திருக்கோயிலிலே தோன்றிய ஒளியினுள்ளே செலுத்தி அவர்களெல்லோரும் வீட்டின்பம் பெறும்படி அருள் செய்த திருவிளையாடலே அருளலாம்.

மேலே ஆராய்ந்த எண்பெரும் சித்திகளும் இறைவனடிக்கு மெய்யன்பு செலுத்துகின்ற உண்மை யடியவர்பால் தாமே தோன்றித் திகழும் அவ்வடியாரும் அவைகளை விரும்புவர் அல்லர். ஆயின் அவர்கள் வருந்தும் ஏனைய உயிர்களிடத்துக் கொண்டுள்ள அருட்டிறத்தாலே அவ்வப்போது அவ்வுயிர்களைக் காக்கும்படி இச்சித்திகள் பிறர்காண அவர்களிடம் விளையும். நாம் நம் செயலால் விளைவது ஒன்றுமில்லை என்றும், எல்லாம் இறைவன் திருவருளென்றும், அவன் திருவருள் நாடி அவனடிக்கு உண்மை அன்பு செய்தலே அறிவுக்கு அடுப்பதாம் திருப்பணி யென்றும் நன்கறிந்து அவனருள் பெற அவனடி மலரை நம் உள்ளத்தில் இடைவிடா தெண்ணி வாழ்வேமாக.

E. M. சுப்பிரமணிய பிள்ளை.

---

# ஆண்டா னடிமைத் தொடர்பு

**(௱எசு-ம் பக்கத் தொடர்ச்சி)**

இத்தொடர்புள்ள மேலேசொன்ன ஒவ்வொரு வகையிலும் ஆளுந் தன்மையும் அடங்குந் தன்மையும் உள என்றும் ஆளுந் தன்மைக்கு எது அதிக அறிவுடைமை என்றும் அடங்குந் தன்மைக்கு எது குறைந்த அறிவுடைமை என்றும் நாம் காண்கின்றோம். ஆளுந் தன்மைக்கு உரிமை யுடையவர்கள் அடங்குந் தன்மைக்கு உரிமை யுடையவர்களின் பயன் பொருட்டு மாத்திரமே தங்கள் ஆளுகைத் தொழிலைச் செய்தல் வேண்டும். அவர்கள் கொஞ்சமாவது தங்கள் பயன் பொருட்டுச் செய்வார்களானால் அஃது அவர்களுக்குப் பழியும் பாவமும் உண்டு பண்ணும். இத் தொடர்புகளினால் ஏற்பட்ட கடமைகளை மக்கள்

எவ்வளவுக்கு எவ்வளவு செவ்வையாய்ச் செய்வார்களோ அவ்வளவுக்கு அவ்வளவு உலகியல் செவ்வனே நடந்து மக்கள் இம்மையில் சுகவாழ்வும் மறுமையி லின்பமும் முடிவில் வீட்டின்பமும் அடைவார்கள்.

22. ஒரு நாட்டை ஆளும் அரசனுடைய அரசியலிலும் இந்த ஆளுந்தன்மையும் அடங்கும் தன்மையும் நாம் காணலாம். அரசன் அல்லது முதன் மந்திரி முதல் கிராம அதிகாரி வரையுமுள்ள அதிகார வர்க்கத்தினருக்குள் ஒவ்வொரு மேல் அதிகாரியும் கீழ் அதிகாரியை நோக்க ஆளுந் தன்மையையும் ஒவ்வொரு கீழ் அதிகாரியும் மேல் அதிகாரியை நோக்க அடங்குந் தன்மையையும் உடையவர்களாகிறார்கள். மேலிருந்து அடிவரையும் படிப்படியாய் இப்படி ஆளுந் தன்மையும் அடங்கும் தன்மையும் இருப்பதற்கு ஏது அதிக அறிவுடைமையும் குறைந்த அறிவுடைமையுமேயாம். அரசனுடைய ஆளும் முதன்மை தன் அரசியலில் தன் அதிகாரவர்க்கத் துரைகள் மூலமாய் மேலே சொன்னபடி நடந்தாற்றான் அவன் அரசில் வாழும் குடிகள் சுகவாழ்வு அடைவார்கள்.

23. மக்கள் பிறந்தபொழுதே தாயாரிடத்தும், கொஞ்சம் அறிவு வந்தபின் தாய் தந்தையிடத்தும், பின் கல்விகற்கும் உபாத்தியாயரிடத்தும், பின் உலகவாழ்க்கையில் தாங்கள் வேலை செய்யும் முதலாளியிடத்தும், பின் உபதேசம் பெற்றுக்கொள்ளும் குருவினிடத்தும், பொதுவாக எப்பொழுதும் அரசியல் நடத்தும் அரசனிடத்தும் அடங்கி ஒழுகுதல் தங்கள் உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒழுக்கமாகும்.

24. இவ்விதமாக உலக அமைப்பில் ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை எங்கும் பரந்து வியாபகமாய் விளங்குவதை நாம் அறிந்தோம். ஆனால் உலக வழக்கில் ஆளுந் தன்மையும் அடங்குந் தன்மையும் மக்களிடத்துள்ள ஏகதேச அறிவினால் பரிபூரணமாய் விளங்காது என்பதை நாம் மனதில் வைத்துக்கொள்ளவேண்டும்.

25. உலக அமைப்பில் இவ்வுண்மை விளங்குவதை நாம் காண்பதுபோல உடல் அமைப்பிலும் காணலாம். ஐம்புலன்கள் மனதிலும், மனது புத்தியிலும், புத்தி உயிரிலும் அடங்கும் படியாயொருவன் ஒழுகுதலே அவனுக்கு சிறப்புடைய குண மாகும். இவ்வுண்மை கடோபநிஷத்தில் கூறப்பட்டுள்ளது.

26. பல நாடுகளின் பூர்வ சரித்திரங்களும் இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மையை நன்கு விளக்குகின்றன. உதாரணமாக ஓர் காலத்தில் பல நாடுகளையுந் தன்னகத்தே கொண்டு மாண்பெற ஆண்ட ரோமன் அரசியல் அழிந்தது இந்த உண்மைக்கு மாறுபாடாக அரச வர்க்கத்தினர்கள் சாதாரணமாயுள்ள எளிய மக்களைத் துன்புறுத்தியதனாலன்றோ? ரோமன் அரசியல் போலவே எத்தனையோ அரசியல்கள் அவைகளினிடத்துள்ள ஆளுந்தன்மையைக் கிரமமாய் வழங்காமல் நெறிபிறழ்ந்து வழங்கி அதனால் அழிந்து, இப்பொழுது இருந்த இடமுந் தெரியாமல் நாசமுற்றன.

27. தற்காலம் ஐரோப்பிய நாடுகளிலுள்ள கலவரங்களும் சண்டைகளும் யுத்தங்களும் சமாதானக் குறைவுகளும் உண்டானதற்கு அடிப்படையான காரணம் யாதென்று உற்று நோக்கில் அஃது ஒரு நாட்டு மக்கள் ஏனைய நாட்டு மக்களிடத்தும் ஒவ்வொரு நாட்டு மக்களுக்குள்ளும் ஒவ்வொரு மக்கட் கூட்டத்தார் பிறமக்கட் கூட்டத்தாரிடத்தும் தங்கள் தங்கள் ஆதிக்கத்தையும் பண லாபத்தையு மாத்திரமே கருதிப் போட்டியும் இகலும் செய்து தங்கள் தங்களிடம் அமைந்துள்ள ஆளும் ஆற்றலை முறைகொட்டி வழங்கினமையே என்று தெள்ளிதிற் புலப்படும். இதே காரணத்தினால் அன்றோ நமது கண் முன்னே சில ஆண்டுகளுக்கு முன்னே எவ்வளவோ பல துறைகளிலும் மேம்பாடு அடைந்திருந்த ஜெர்மன் நாடு இப்பொழுது நாம் பத்திரிகைகள் மூலமாய்த் தெரிகிறபடி மிகவுந் தாழ்ந்த நிலைமை அடைந்தது?

28. இவ்விதமாக உலக அமைப்பிலும் உடல் அமைப்பிலும் இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை பரக்க

விளங்குகின்றது. இதுவன்றி நாடுகளின் பூர்வ சரித்திர ஆராய்ச்சியாலும் இவ்வுண்மையை நாம் அநுமானித்து அறிகின்றோம். இதனை உற்று நோக்கில் கடவுள் தான் படைத்த உலகிலும் உடலிலும் உள்ள அமைப்புக்களில் தனக்கும் உயிர்களுக்கும் இயல்பாயுள்ள ஆண்டானடிமைத் தொடர்பு உண்மை விளங்கும்படி செய்தது அந்த உலகில் உடலுடன் வாழும் உயிர்கள் தன்னை உள்ளவாறு அறிந்து பந்தம் நீங்கி வீடு அடையும் பொருட்டே யாகும் என்பது நாம் கண்கூடாக அறியக்கிடந்த உண்மையேயாம்.

'அன்னதா லாய வுடம்பின் பயனெல்லாம்
முன்னோனைக் காட்டி விடும்'

என்றும்,

'பிதற்று முணர்வை யறுத்துப் பிரபஞ்ச
விகற்ப முணர்வதே வீடு'

என்றும் ஔவையார் பாடி யருளியது இக் கருத்துப்பற்றியே.

28. நான்காவது ஒழுகலாறு.

மேலே கூறியவாற்றால் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் ஒருவர் இவ்வுலகை ஆட்சி செய்கிறார் என்றும், அவர் ஆட்சிக்குள் சிற்றறிவும் சிறுதொழிலுமுடைய மக்களாகிய நாம் அடங்கி ஒழுகவேணுமென்றும், அப்படி நாம் அவ்வாட்சிக்குளடங்காது கடவுளால் நமது உயிர் வளர்ச்சியின் பொருட்டுக் கொடுத்த நமது வரையளவுப்பட்ட தன்வயத் தன்மையை முறை பிறழ்ந்து ஒழுகுவோமானால் கடவுள் நம்மைத் துன்புறுத்தி அவர் ஆட்சி வரைக்குள் வரும்படி செய்வர் என்றும் நாம் அறிகின்றோம். அறிவால் நிறைந்த பெரியோர்களும் இவ்வுண்மைகளை எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். அவற்றுள் சில இங்கே குறிப்பிடுகின்றேன்.

திருநாவுக்கரசு சுவாமிகள் "ஆட்சியுலகெலா முடையாய் போற்றி" என்றும், "உரியா யுலகினுக கெல்லாம் போற்றி" என்

றும், "உலகோம்பு மோண்சுடரே" என்றும், திருஞான சம்பந்த சுவாமிகள் "உரையுலாம் பொருளா யுலகையா ளுடையீர்" என்றும், காரைக்காலம்மையார் "அருளே யுலகெலாமாளவிப்ப தீசன்" என்றும், "சார்ந்தார்க்குப் பொற்கொழுந்தே யொத்திலங்கிச்சாராது, போந்தார்க்குத் தீக்கொழியின் பெற்றியவா" என்றும், திருமூலர் "தீயினும் வெய்யன் புனலினுந் தண்ணியன் ஆயினு மீசனரு ளறிவாரில்லை" என்றும் பாடி யருளினமை காண்க.

29. முதலிலே சொன்னபடி இந்த ஆண்டான் அடிமைத் தொடர்பு உண்மை உலகில் விளங்கும் எல்லா உண்மைகளுக்கும் நடு நாயகமாய் விளங்குவது. இதனைச் சாராத உண்மை ஒன்றும் உலகின்கண் நிகழ்தல் இல்லை. அதனைச் சார்ந்துள்ள முக்கியமான ஓர் உண்மையை மாத்திரம் நான் இங்கே எடுத்துக் கூறுகின்றேன், மக்கள் உலக வாழ்க்கை ஒழுக்கத்துக்கு அஃது ஆவசியகமாக வேண்டப்படுதலின்.

30. கடவுள் உயிர்களை ஆளுந்தன்மை எதற்காக என்றால் அவ்வுயிர்கள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருள்களையும் அடைவதற்காக. கடவுள் கருத்து இதுவாயிருப்பதால் அக் கருத்துக்கு மாறாக நாம் எந்த உயிருக்கும் தீங்கு செய்தல் கூடாது. நாம் ஒருயிர்க்குத் தீங்கு செய்தால் அத் தீங்கு கடவுளுக்குச் செய்த தீங்கே யாகும் என்று எண்ணித் தீங்கு செய்தலை அறவே ஒழிக்கவேண்டும். "எனைத்தானும் எஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானும், மாணசெய் யாமை தலை" என்ற தெய்வப்புலமைத் திருவள்ளுவர் வாக்கைத் தலைபெறக் கொண்டு ஒழுகல்வேண்டும். தீங்கு செய்தலை அறவே ஒழிப்பதுமல்லாமல் சமயம் நேர்ந்தபொழுதெல்லாம் உயிர்களுக்கு நன்மையே நாம் செய்தல்வேண்டும். நாம் உயிர்களுக்கு நன்மை செய்தல் கடவுளுக்குச் செய்த நன்மையேயாகுமாதலின் நாம் நன்மை செய்யச்செய்ய நம்மிடத்தில் அறத்தன்மை அல்லது கடவுட்டன்மை வளரும். திருவள்ளுவநாயனாரும் "ஒல்லும்வகையா னறவினையோவாதே, செல்லும்வா யெல்லாஞ் செயல்" என்று அருளிச்செய்தார். இவ்வாறாக மக்கள் ஒரு

வருக்கொருவர் தீங்கு செய்தலை ஒழித்து நன்மை செய்து ஒழுகுவார்களானால் அவர்களுக்குள் தற்கால மிருக்கிற பகைமை ஒழிந்து நண்பு உண்டாகும். இந்த நண்புதான் சகோதர தருமம் என்று சொல்லப்படுவது. இஃது இம்மை மறுமை இன்பங்களை யும் முடிவில் வீட்டின்பத்தையும் மக்களுக்கு உதவலல்லது எல்லாம் வல்ல முழுமுதற் கடவுள் அருளைத் துணையாகக் கொண்டு உலகிலுள்ள மக்கள் அனைவரும் இச் சகோதர தரு மத்தைக் கடைப்பிடித்து ஒழுகுவார்களாக.

மா. வே. நெல்லையப்பபிள்ளை,

பென்சன் தாசில்தார், சிந்துபூந்துறை.

---

# இலக்கண விளக்க உரையாளர் நூலாசிரியரே

செந்தமிழ்ச் செல்வியின் சிலம்பு உ, பரல்கள் ந, ச-ல் பண் டிதர் ஸ்ரீமாந் ந. மு. வேங்கடசாமி நாட்டா ரவர்கள் 'இலக் கண விளக்க வுரையாளர் யார்?' என்னும் ஓ ராராய்ச்சியுரை எழுதியிருக்கின்றார்கள். அவ் வாராய்ச்சியுரையால், 'இலக்கண விளக்க முடையாரும் அதற்கு உரைகண்டாரும் வேறு வேறுவ ரென்பதும், வைத்தியநாத தேசிகரே நூலும் உரையு மியற் றினரெனக் கொண்டு பிறர் மேற்கோள் காட்டியதும் மறுப் புரை வரைந்ததும் பிழையா மென்பதும்' முடிவு செய்யப்பட் டிருக்கின்றன.

இம் முடிவில் 'பிறர் மேற்கோள் காட்டியது......பிழை' யென்றது இலக்கணக் கொத்து ஆசிரியராகிய சுவாமிநாத தேசிக ரையும், 'பிறர்......மறுப்புரை வரைந்தது பிழை' யென்றது திராவிட மாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞான சுவாமிகளை யும் குறித் தெழுந்தனவாம். இவ்விருவருள் சுவாமிநாத தேசிகர்

'என் கண்காண......வயித்தியநாத, ணிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்' என்று கூறுகின்றார். இதற்கு ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் 'நூலாசிரியரின் புதல்வர் பாயிரத்து இங்ஙனம் 'பொருள் விரித்துரைத்தனன்' என்றது கொண்டே (சுவாமிநாத தேசிகர்) துணிந்து கூறியிருத்தல் வேண்டு' மெனச் சமாதானங் கூறுகின்றார்கள். 'என்கண்காண' என்று ஓராசிரியர் கூறியதை மிகவும் எண்மையுடையதாகக் கருதிக் கழித்தல் பொருத்த முடையதன்று. மேலும் சுவாமிநாத தேசிகர் யாதொன்றும் பயனின்றி வாளா கூறுரென்பதும், அவர் நூலாசிரியராகிய தாம் உரையியற்றுதல் தக்கதோவென வினு எழுப்பி அதற்கு விடை கூறும்வழி 'என்கண்காண......வயித்திய நாத, ணிலக்கண விளக்கம் வகுத்துரை யெழுதினன்' என மேற்கோள் காட்டுகின்ரு ரென்பது நாம் அறிந்த நிலைமையில் அவர் கூறுவதைப் பொருளில் கூற்ருகப் புறக்கணித் தொதுக்குதல் கூடாது. அன்றியும் சுவாமிநாத தேசிகர் சரித்திரம் அவர் வைத்திய நாத நாவலரிடம் தாமியற்றிய இலக்கணக் கொத்து நூலைச் சொல்ல அவ்வைத்தியநாத நாவலர் மிக வியப்புற்று மன மகிழ்ந்தாரென்று கூறுகின்றது. நிற்க,

இலக்கண விளக்கப் பாயிரத்துள் 'பொருள் விரித்துரைத்தனன்' என வருவதற்கு 'வைத்தியநாத தேசிகர் தமது நூலை மாணவர்க்குப் பொருள்விரித்து அறிவுறுத்தின ரென்ற துணையே பொருள்கொள்ளின் இடர்ப்பாடிலதாம்' என்று ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் கூறுகின்றார்கள். பாயிரச் செய்யுள் கூறுவதாவது:—'......எழுத்து முதன் மூன்றையும் யாவருந் தெரிய ......பகருக வென்று...—திருவேங்கட நாத ணேதினுகை...... பொருள் விரித்துரைத்தனன்......வைத்திய நாத தேசிகனே' என்பது. இதற்கு ஸ்ரீமாந் நாட்டாரவர்கள் கருத்துப்படி பொருள்கொள்ளின் 'யாவருந் தெரியப் பகருக என்று திருவேங்கடநாதன் கூற வைத்தியநாத தேசிகன் தனது நூலை மாணவர்க்குப் பொருள் விரித்தறிவுறுத்தினன்' என்பதன்றோ பொருளாகப் பெறப்படும். இவ்வாறு 'யாவருந் தெரியப் பகருக' என்ற

தற்கு 'மாணவர்க்குப் பொருள் விரித்தறிவுறுத்தினன்' என்று கூறுவது பொருத்தமானது தானு என்பதை அறிஞர் சிந்திப்பாராக.

இனி மாதவச் சிவஞான சுவாமிகளோ, இலக்கண விளக்கத்திற்கு 'இலக்கண விளக்கச் சூறாவளி, யென்னும் பெயரால் மறுப்பொன்று அருளிய பெரியார். ஒரு நூலுக்கு மறுப்பு எழுதுவார் அந்நூலை எவ்வளவு நுணுகி நோக்கியிருப்பாரென்பதும் 'உயிரும் மெய்யுங் கூடுகின்ற கூட்டத்தினை எல்லா மெய்யுமென மெய்மேல் வைத்துக் கூறியது அது முன்னர்க் கூறப்படுதல் நோக்கிப் போலும்' என ஐயுறவு தோன்றக் கூறுகின்றாரென்பதும் மறுப்பெழுதிய மாதவச் சிவஞான சுவாமிகள் பார்வைக்குப் புலப்படாம லிருந்தனவென்று எண்ணிக் கொள்வது அறிவுடைமைக் கழகன்று.

ஈங்கிவை யொருபுற மிருப்பச் சுவாமிநாத தேசிகரும் மாதவச் சிவஞான சுவாமிகளும் நூலாசிரியராகிய வைத்திய நாத நாவலரே உரை யெழுதினரென்று கூறுதற்குக் காரணம் யாதென்பது ஆராயத்தக்கது. வைத்திய நாத நாவலர் இலக்கண விளக்க நூலைத் தம்முடைய தனிவாக்கின்றாற் கூறினரல்லர். அவர் பெரும்பாலும் பவணந்தி முனிவர், தொல்காப்பியர் முதலியோர் கூறிய சூத்திரங்களைத் தழுவிச் சூத்திரமும், இளம்பூரணர், சேனவரையர், நச்சினர்க்கினியர், மயிலைநாதர் முதலியோர் கூறிய வுரைகளைத் தழுவி உரையும் இயற்றிய மாதைத் திருவேங்கட நாதர் தம்மிடம் எதிர்பார்த்த தொழிலைச் செய்து முடித்தனர். இதுவே பரம்பரை வரலாறு. நன்னூல் மயிலைநாத ருரைப் புத்தகத்தில் நூலாசிரியர் வரலாற்றில், இலக்கண விளக்கத்தில் நன்னூலிலிருந்து ஏறக்குறைய இருநூற்றைம்பது சூத்திரங்கள் எடுத்தமைக்கப்பட்டிருக்கின்றன வென்று கூறப்பட்டிருப்பது அறியத்தக்கது.

(தொடரும்)

சிதம்பரராமலிங்க பிள்ளை,
திருநெல்வேலி.

# காழித்தேவாரச் சிறப்பு

(௫௮௮-ம் பக்கத் தொடர்ச்சி)

## திருக்கை கோட்டிகள் திருமுறை எழுந்தருளுவித்தல்.

இனி நிறுத்தமுறையானே காழித்தேவாரப் பெருமையைக் கூறுமுன், அத் தேவாரங்களிற் பிரதிபேதங்கள் ஏற்பட்ட முகாந்திரத்தை ஆராய்தல்வேண்டும். இப் பாடாந்தர ஆராய்ச்சிக்கு முதற்கண் விசாரிக்கவேண்டுவது திருக்கோட்டிகள் திருமுறை எழுந்தருளுவிக்கும் பிரபாவத்தை. உண்மை நூற்களினும் பாடபேதங்கள் உளவாமோ என, திருக்கோவையார் பேராசிரியருரையையும் திருக்குறட் பரிமேலழகருரையையு ;. வியாக்கியாதாக்கள் மேற்கோளாக எடுத்தாண்ட தேவாரப் பகுதிகளையும் பல ஆன்றோர் கரலிகித வழூஉக்களைக் களைந்து அச்சியற்றுவித்த தேவாரபபிரதிகளையும் கண்ணுற்ற கற்றோர் ஐயமுறார். நம்பியாண்டார் நம்பிகள் காலத்து அக்காலத்திருந்த நமது முன்னோரது விமரிசானுபவ ஞானங்களுக்கு ஏற்ற பகுதிகள் வெளிப்பட்டும், அந் நம்பிகளுக்குப் பின் சேக்கிழாருக்குமுன் மறைந்த பதிகமும் (உபமந்யு—௨-வது புத்தகம் — போதசம்பந்தநாதர், சுலோகம் ௮௨; திருஞானசம்பந்தர் புராணம் ௮௮) செய்யுளும் அடியும் சீரும் அசையும் பலவாகும்.

திருக்கைகோட்டிகள் திருமுறை எழுந்தருளுவித்தல் என்ற தொடர் மொழி சிலாசாசனங்களிற் கண்டது. இத்தொடரில், திருக்கை கோட்டிகள் என்பார் சிவபெருமானது பரிவாரங்களும் (திருஆதியுலா-௨௩-௫௰), திருவுடைமன்னரது ஐவரும் எண்மரும், ஐவரும் பிறரும் ஆகிய பகுதியினரும் அன்றி, மெய்யடியார் பக்கல் குழீஇயெழுந்தருளும் திருக்கரகம் தாங்குவார் முதலிய திருக்கூட்டத்தினருள் (சம்பந்தர் உலா—௩௭—௫௨, ௮௯—௮௯) அம்மெய்யடியார் திருவாய்மலர்ந்தருளும் திருப்பதிகங்களைத் திருமுறையிற் காப்புச்செய்து எழுந்தருளுவிக்கும் பெரியோர்களும், திருக்கோயில்களினும் திருமடங்களினும் திருமாளிகைகளினும் அப் பதிகங்களைப் பின்னர்க்கேட்டுச் செப்பேட்டினும் தாலபத்திரங்க

ளினும் பதிந்து பேணிவைக்கும் மேலோர்களும், அவை சிதைந்த விடத்துப் புதுக்கியும் விளக்கியும் புரந்தருளும் புண்ணியர்களும் ஆவார். ஈண்டுத் திருமுறையென எடுத்துக்கொண்டது 'கோசமும் முறையெனலாகும்' 'புத்தகமுங் கோசம் என்ற ஆன்றோர் வாக்கின்படி கோசங்கள் பலவாயினும், சைவத்திருமுறை பன்னிரண்டனுள் மூவர் முதலிகள் அருளிச்செய்த அருமைத் திருப்பாசுரங்கள் அடங்கிய ஏழு திருமுறைகளே. அபௌருஷேயமென்றும் பௌருஷேயமென்றும் பகுத்தோதப்பட்ட வேதங்களும், ஆகமங்களும் ஆகிய பரவைந்தவ நித்திய வாக்குக்கள், பரம கருணாநிதியினின்றும், சிவசத்தியின், பரநாதமுதல் பார்வைரை அதிஷ்டான அதிதெய்வங்களால், சமஸ்கிருதம் திராவிடம் என்னும் உயர்தனிச் செம்மொழிகளால், பரம்பரையிற் கேட்கப்படும் ஆற்றினையும், பிருதுவியில்மட்டும் பதினெண் பாஷைகளால் கேட்கப்படும் உபசாரமுறைமையினையும் (திருமந்திரம்-எரு,எசு, சுகூ) நால்வகை வாக்கின் அநுபவம் முதிர்ந்த சைவசீலர் நன்கறிவர். பூதாதியகங்காரத்தும் இவ்வாக்குக்கள் அச்சீலர்களது அநுக்கிரகத்தால் நிகழ்வன. தேவலோகத்தும் பூலோகத்தும் நாகலோகத்தும் அவை தேவர்முநிவர்களால் ஒவ்வோர்காலத்து ஒவ்வோராற்றாற் பரவலாகும் (சைவநூல்,மநு—க,உ,ந, ருஅ) வடமொழி வேதம் எழுதாக்கிளவியாய் வக்தா சுரோதா என்னும் கிரமத்தில் வழங்கப்பட்டு வருவது. தென்மொழி மறை அநுபவ ஞானத்திற்கு ஏதுவாகப் பரமாசாரியராலும், அப் பரமாசாரியர் அதிஷ்டித்து ஆவேசித்த குருமூர்த்திகளாலும் கலைகளைப்பற்றிச் சப்தார்த்த சொரூப மாகவும், ஆராய்ச்சி ஞானத்திற்கு அந்தச் சத்தப்பிரபஞ்சத்தினின்று அதனோடு என்றும் வேறுபடாத அர்த்தப்பிரபஞ்ச ரூபமாகவும், பக்குவ பேதங்கட்குத் தகப் பொருள் விளங்குவனவாகவும் தோன்றும். அவ்வாறு அந்தத்திற்றோன்றி நமக்கு இன்று புலனாவது பலபல வியாசர்கள் மூலமாகவும், உண்மை நாயன்மார்கள் வாயிலாகவும் வெளிவந்த வேதங்களே (இவை முறையே பொதுவுஞ், சிறப்பும் ஆவன). இங்ஙனம் நமது அறிவிற்குப் புலனாகிய வேதாகமங்கள் என்றும் ஒருபடித்தாய் முற்றிலும் புலனாவதில்லை. சிற்சிலகாலத்து எவ்வெப்பகுதிகள் ஆவசிய

கமோ அவ்வப்பகுதிகளே தோன்றிப் பிறபகுதிகள் ஒடுங்கிநிகழ்வன. எழுதப்பட்ட ஸ்ரீகோசங்களுக்கும் இந்நியமம் தவறிலது.

அநாதியாகிய திராவிடவேதத்துள் நாராயணனைக் கூறும் பகுதியை இவ் யுகத்தில் நம்மாழ்வார் சிந்தித்துப் பாராயணஞ் செய்தருளிய திருவாய்மொழியை அவருடனின்று பட்டோலை பிடித்தார் மதுரகவியார். அப்பட்டோலையைக்கொண்டு, பலகோசங்கள் எழுதப்பட்டன. அவையாவும் ஒருகாலத்து மறைந்தபின்னர், நாதமுநிகள் அவ் ஆழ்வாரை வேண்டி அவ ரநுக்கிரகத்தால் —(அவ்வேதத்தை)— மனனம்பண்ணி ஓதித் திரும்பவும் ஸ்ரீகோசம் செய்தருளினர் ஸ்ரீஸூக்திகளை. அதன்வழியாகப் பலகோசங்கள் வரையப்பட்டு வருகையில், ஸ்ரீராமாநுஜர் அவற்றை ஸ்ரீ பாஷ்யாதிகளாலும், பிறரைக்கொண்டு செய்வித்த வியாக்கினங்களாலும் நிலைபெறுவித்தார். இது வைஷ்ணவ பரம்பரை. (இதனை விரித்து நம்மாழ்வார்—அவரது திருச்சீர்த்தொடைஎன்ற வியாசத்துட் கூறியுள்ளேன் . வேதசிவாகமங்கள் சுத்தவைதீக பரம்பரையினும் சுத்த சைவபரம்பரையினும் வழங்கிவரும் கிரமத்தை யீண்டுச் சுருக்கிக் கூறினேன். இனி, தொன்றுதொட்டு வரும் சைவத்திருமறை சங்ககாலத்தின் முன்னரே அவிர்ப்பூதமாக, அக்காலத்துத் தொன்மரபின் வேதமுறுவன பாடலாய் (நான்மணி—௫௪; தொல்—பொருள்—ஒதற்பிரிவு சூத்திரவுரைகள்) நம் செந்தமிழில் வழங்கிவந்தன சிலபலவே. புறப்புறச் சமயப் போராட்டம் நிகழ்ந்து, அவையுங் கரந்தொழியுந் தறுவாயில், நமது புண்ணியவசத்தால் சைவத் துதிகாலம் தொடங்கிற்று. அக்காலத் தொடக்கத்து, அந்தண் காழியில் அந்தணர்தங் குடி மரபில் உதித்த சிவபாதவிருதயர் சமண்கையர் சாக்கியர்தம் பொய் மிகுத்தே ஆதி அருமறை வழக்கமருகி அரனடியார்பால் பூதிசாதனவிளக்கம் போற்றப் பெறுதொழியக் கண்டு பரசமயம் நிராகரித்து நீறுக்கும் காதலனைப் பெறத் தவம்புரிய, திருவவதரித்தருளிய திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் ஞானப் பா லுண்டு திருப்பதிகம் பாடிச் சைவத் திருப்பதிகளுக்கு எழுந்தருளும்போது பல மேலோரும்(திருஞா-உசங-௬எ,) திருக்கூட்டத்தில் திருப்பதி

கங்களைப் பாடும்போது யாழ்வாசித்தற்கும் பின்னரும் அத் திருப்பதிகங்களை யெடுத்து ஆண்டு யாழின் வாசிப்பதற்கும் பாணனாரும் பாணிச்சியாரும், (உஎசு—அ, சசஅ—நிஉ) திருப்பதிகங்கள் யாவற்றையும் திருமந்திரகோசங்களாகவும் திருமுறைகளாகவும் அவ்வப்போது வகுத்துக் காப்புச்செய்துவைப்பதற்குப் பலபெரியோரும், (எஅக—கூ0) திருப்பதிகம் எழுதும் அன்பராய்ச் சம்பந்தசரணாலயரும் (கூாக—ந, கூாஎ—0) அவரோடு இருந்தனர். இங்ஙனமே அவரோடிருந்து அவர் பாடிய பதிகங்கள் யாவும் திருக்கைகோட்டிகளால் காப்புச்செய்யப் பெற்றன. இவ்வாறே திருநாவுக்கரசு நாயனாரைப் பலபெரியோர் அடுத்து நின்றும், அடுக்காது சேய்மையினின்றுழி திருவருள் உணர்த்த உணர்ந்து நின்றும், அவர் பதிகங்கள் யாவற்றையும் திருக்கைகோட்டிகள் காப்புச்செய்தனர். இப்பெரியாரிருவரும் இயற்றியருளிய (வைத்த—கக) திருப்பாசுரங்கள் யாவும் அக்காலத்தே ஆறுதிருமுறைகளாக வகுக்கப்பட்டன என்பது திருமுறைகண்ட புராணம் உந—வது செய்யுளில் முன்போல வகுக்கவெண்ணி, என்றதனாற் போதரும். கணநாதநாயனார் திருமாளிகைத் தமிழ் விரகராக இருந்து திருக்கைகோட்டிகளை யாக்கித் தாமும் அக்கோட்டிகளுமாகத் திருக்கோசங்களை யெழுந்தருளுவித்துப் பேருதவி புரிந்து வந்தனர். அந் நாயனாரால் அமைக்கப்பட்ட திருக்கைச் சந்தானத்தார் பின்னர் உண்டாய திருமுறைகளையும் வரைந்து, பிறர் எழுதிவரும் திருமுறைகளையும் ஒத்துப்பார்த்து, மூவர்கையி லச்சினை வைத்து, பல சிவாலயங்களிலும் எழுந்தருளப் பண்ணினர் (வைத்தார்-கசு). (தொடரும்)

P. A. முத்துத்தாண்டவராய பிள்ளை.

---

# வெறுஞ் சிறுமொழி

கொல்லன் சூழ்ச்சியால் கொன்றவன்
கோவலனைக் கொல்ல நேர்ந்தது.

* * *

“ அன்று தொட்டுப் பாண்டிடநாடு மழைவறங் கூர்ந்து வறுமை யெய்தி வெப்புநோயுங் குருவுந் தொடரக் கொற்கையி

விருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற்கொல்ல ராயிரவரைக் கொன்று களவேள்வியால் விழவொடு சாந்தி செய்ய நாடுகலிய மழைபெய்து நோயுந் துன்பமு நீங்கியது"

கொற்கைக் கொற்றவன் கொல்லரைக் கொல்ல,
கொலைப்பழி நீங்கிற்று!

* * *

நிற்க, இருபெரும் புலவர் வெவ்வேறு காலத்தில் முறையே பொன்னுக்குங் கூழுக்கும் பாடி முடித்த ஒருவெண்பா உண் டென்பர்.

இவருள் ஒருவர் மாண்டகுதிரை மீண்டு வரப்பாடிய கல்வி இல் பெரியராகிய கம்பர். கல்லாமலே கவிபாடுந்திறமை பெற் றாராகலின் அவர் கல்விஇல் பெரியர்.

மற்றவர், உப்புக்கும் புளிக்கும் பாடிய ஔவை.
இவர்களிருவரும் ஒரு பரத்தையின்மேற் கவி பாடினர்.

* * *

சிலம்பு எனுஞ் சொல் சிலப்பதிகாரத்தை நினைப்பூட்டு மென்பதை அறவே மறந்து,

"தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பொற் சிலம்பி அரவிந்த தாளணியும்
செம்பொற் சிலம்பே சிலம்பு"

என்றனர்.

கண்ணகியின சிலம்பு செய்தவற்றை யறிந்தவர் இதைச் சற் றேனும் பொறார். ஆதலின் மேற்காட்டிய வெண்பாவை மாற் றுக :—

தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவதுஞ் சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பின் விழிக்கண் ணகியா மவளணிந்த
செம்பொற் சிலம்பே சிலம்பு.

K. P. சந்தோஷம் B.A , L.T.

# மாதிருக்கும் பாதியன்

## அல்லது

# அர்த்தநாரீசுவரர்

(௱சுரு-ம் பக்கத் தொடர்ச்சி)

அஃதாவது அருளை மேற்கொண்டு நிற்பர். அது தான் ஞானசொரூபமாகிய சிற்சத்தி என்று சொல்லப்பெறும். "சத்தி தன் வடிவே தென்னிற் றடையிலா ஞானமாகும்" என்பது சாத்திரம். சிவத்திலிருந்து இப்போது சத்தி தோன்றிற்று. அதன்பின் ஒன்றன்பின் ஒன்றாக முன் ஒடுங்கிய அம் முறையிலே சதாசிவமாதி மூர்த்திகளும் மாயையும் புவனங்களும் தோன்றும்; உலகம் நடைபெறும். இவ்வாறு சிருட்டி யாரம்பத்தில் சத்தியோடு கூடி "மாதிருக்கும் பாதியனாய்" நின்ற இறைவன் மீண்டும் பிரளய காலத்திலே ஒடுக்க முறையிலே "தானும் தன் தையலுமாய்" எஞ்சி நிற்கின்ற அதுகாறும் இத் திருக்கோலமே தாங்கி நிற்பன். உலக சிருட்டிமுதல் உலக ஒடுக்கம்வரை அவன் பூண்டிருப்பது இத் திருக்கோலமேயாம் இஃது உயிர்களை வினைப்பயன் அனுபவிக்கச் செய்து உய்யக் கொள்ளும் பொருட்டு அவன் நிற்கும் நிலையா மென்பதை,

"அவனே தானே யாயிரு வகையிற்
போக்குவரவு புரிய ஆணையின் நீக்கமின்றி நிற்கு மன்றே"

என்னும் சூத்திரம் விளக்கும். ஆகவே மகாப்பிரளய ஒடுக்கத்திலிருந்து மீளச் சிருட்டியாகும் வரையிலே எல்லாம் தன்னுள் ஒடுக்கி ஏகனாய் நிற்கும் அந் நிலையிலேயன்றிப் பிறிதெல்லாக் காலத்திலும் இக் கூடிய கோலமேகொண்டு பரமேசுவரன் விளங்குவன். ஆதலின் இஃது அவனுக்குப் பழையகோலமாயிற்று என்பது குறித்தே இக் கோலத்தைத் "தொன்மைக்கோலமே" என்று அருளினார் ஸ்ரீமணிவாசகப் பெருமானார்.

ஆன்மாக்கள் இத் திருக்கோலத்தை நேரே தரிசித்துத் தியானித்து உய்யும்பொருட்டு என்றும் அடியார்க்கெளிவரும் பெருமானாகிய பரமேசுவரன் சேலம் ஜில்லா கொங்கு நாட்டின் திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) என்னும் திருத்தலத்திலே இத்தொன்மைக்கோலம் நேரே காட்டி நீற்றழகராய் வீற்றிருந்தருளுவர். இத் தலம் தென்னிந்திய இருப்புப் பாதையில் சங்ககிரி என்னும் (ஸ்டேஷனிலிருந்து) கிடையிலிருந்து 5 மைல் தூரத்திலுள்ளது. இத் திருக்கோலத்தை நேரே கண்டு தரிசித்தவர்கள் நாம் மேலே தலைப்பிற் காட்டிய ஸ்ரீ மணிவாசகப் பெருமானார் திருப்பாசுரத்தின் பொருளை அநுபவ சித்தமாகக் கண்டு உய்யும் பெரும் பேறு வாய்க்கப் பெறுவார்கள்.

இத் திருக்கோலத்தின் தொன்மையையும் மேன்மையையும் உலக மெல்லாம் தனது இலச்சினையையே பொறித்து விளங்கும் முதன்மையையும் கருதியே இதனைப் பலபடப்பாராட்டிப் பேசுவர் எந்தம் பெருமக்களாகிய ஆசாரிய மூர்த்திகள். இதனை எப்போதும் தம் கண்முன்னே காணப்பெற்றுப் பன்னிப் பன்னிப் பாடிக் களிகூறுவர். உதாரணமாக ஸ்ரீ பட்டினத்தடிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவிடைமருதூர் மும்மணிக்கோவை முதற் பாசுரத்தை வாசிப்போமானால், இத் திருவுருவத்தைத் திருமுடி முதல் திருவடிவரைத் தியானித்துத் தரிசித்து,

“ திருவடி பரவுதும் யாமே நெடுநாள்
இறந்தும் பிறந்து மிளைத்தனம் மறந்தும்
சிறைக் கருப்பா சயஞ் சேரா
மறித்தும் புகாஅ வாழ்வுபெறற் பொருட்டே ”

என்று துதித்து வாழ்வுற்ற பெருமை தெரியலாம்.

நாமும் அவ்வாறே உணர்ந்து உய்வோமாக.

முற்றும்

C. K. சுப்பிரமணிய முதலியார், B.A.

# மொழிகள் வெளியிடு முண்மை

(௱௫௭-ம் பக்கத் தொடர்ச்சி)

## நன்மை

மென்மை, வன்மை முதலிய பண்புப்பெயர்கள், மெல், வல் எனு மடிகளாற் பிறக்குமாறே, நன்மையும் 'நல்' எனும் முன்னிலையினின்று பிறப்பது. 'நன்மை' என்ப தின்னதென இங் காராய்வாம். தொன்னாளில் தமிழர் இச் சொல்லை என்ன பொருளில் வழங்கினார்க ளென்பதைக் காணவேண்டுமாயின் தொன்று தொட்டு வருஞ் சில சொற்றொடர்களை யுற்று நோக்கவேண்டும். 'எண்ணெய்' என்பது முதலில் எள்ளின் நெய்யைக் குறித்தது. நாளாவட்டத்தில் இப்பெயர் வேம்பு, ஆமணக்கு முதலியவற்றின் கொட்டையினின் றெடுக்கப்படும் நெய்களுக்கும் பெயராயிற்று.

வேம்பினின் றுக்கப்படும் நெய் வேப்பநெய் எனப்படாது வேப்பெண்ணெய் எனப் பெயரிடப்பட்டது. ஆமணக்கு நெய், விளக்கெண்ணெய் எனப்பட்டது. இங்ஙனம் எண்ணெய் எனுஞ் சொல் தன் முதற்பொருளை இழந்து வேறுபொருளில் வழங்கத் தொடங்கினதால், அம் முதற்பொருளைக் குறிப்பதற்கு வேறு சொல் வேண்டியதாயிற்று. ஆதலின் நல்லெண்ணெய் எனுஞ் சொற்றொடர் தோன்றிற்று. நல்லெண்ணெய்=சரியான எள் நெய். இவ்வாறே பாம்பு எனும் மொழி முதலில் தலை விரித்தாடும் பாம்பையே காட்டிற்று. சாரை, கொம்பேறி முதலியவையும் பாம்பெனப்பட்டமையால், தலை விரித்தாடும் பாம்பு 'நல்லபாம்பு' எனப் பெயர் பெற்றது. நல்லபாம்பு=சரியான பாம்பு. அன்றியும், உழுது பயிரிடப்படும் நிலம் இருவகைப்படும்: ஒன்று நெற் பயிர்விளையும் நிலம், மற்றொன்று புல்லு (கம்பு), கொள்ளு, வரகு முதலியன விளையும் நிலம். முந்தியது நன்செய்யென்றும், பிந்தியது புன்செய் என்றும் பெயர் பெறும். நன்செய் என்பது புன்செய் என்பதற்கு எதிர்மறையாயின், அது நாம் முற்காட்டிய பொருளையே தருவது காண்க.

பின்வரும் பேச்சை நோக்குக:—

ஒருவன் "உன்னுடைய செய்கையை நான் மிகவும் வெறுக்கிறேன்"

மற்றவன் "நல்லது; என்னை என்ன செய்யச் சொல்லுகிறாய்?"

இதில் 'நல்லது' என்பதன் பொருளென்ன? 'சரி' என்று பொருள் கொள்ளாவிடின் வேறு எப்பொருள் இவ்விடத்திற் பொருந்தும்? 'பெண் நன்மை யடைந்தாள்', 'பெண் நன்மையானாள்' என்று வருஞ் சொற்றொடர்களில் நன்மை எனுங் கிளவி திரட்சியைக் காட்டும். திரட்சி என்பது ஒரு நிலை; அது சரியான நிலை யாதலின் நன்மை எனப்பட்டது. 'நல்ல தண்ணீர்', 'நல்ல மிளகு' என்பவை நாம் குறித்தபொருளை உறுதிப்படுத்துகின்றன. 'நெடு நல் வாடை' என்பதை ஆராய்க.

ஆதலின் முன்னாளில், எது சரியானதோ அதுவே நல்லதாயிற்று. சரியானதெது வெனின், மிகைபடாமலுங் குறைவுபடாமலுமிருப்பதே. ஒரே உயரமுடைய இருவர் சரி உயரமுடையவர் எனப்படுவர். 'இது சரியான குதிரை' என்று ஒருவன் சொல்லுவானாகில் அக்குதிரை வளர்ச்சியிலும் வடிவத்திலுந் தன் கருத்திற் கிசைந்திருக்கின்றது என்ற கருத்துடனே அங்ஙனஞ் சொல்லுகிறான். அவன் ஒரு குதிரையைக் கண்டு 'இது பருத்தது, இது சிறுத்தது, நீண்டது, குறுகியது' என்று சொல்லக் கூடுமாயின் அக்குதிரை சரியான குதிரையன்று. ஆகையால் எவ்வகையிலும் பிழைபடாமையே நன்மையாகும்; பொருத்த முடையதே சரியானதாகும். 'இருபது தடக்கை ஒருபது முடியோன்' மகனானான். 'இவன் மகன்' என்று சொல்வோமாயின், மகன் எனுஞ் சொல்லாற் குறிக்கப்படும் நினைவிற்குச் சரியான பண்பும் அமைப்பும் வாய்ந்தவன் இவன், என்பது பொருள். இன்னும் இதை யூன்றிப்பார்த்து 'நன்மை' எனுஞ் சொல்லின் முழுப்பொருளையுங் கண்டுகொள்க.

முற்றும்

K. P. சந்தோஷம், B.A., L.T.

# செந்தமிழ்ச் செல்வி வாழ்த்து

## நேரிசையகவல்

மணிவீற் றிருந்த மாசறு பனிக்கடல்
வளைஇய வுலகத் தளைஇய மொழிகளு
ளினிமையுந் தண்மையு மியற்கையொலி வழாஅமையுஞ்
சில்லெழுத் தியன்ற சொல்லொழுக் கானே
நிறைபொருள் தெரிக்கு முறைமைநன் குடைமையுஞ்
சிவணிய தமிழெனு மமிழ்துபுரை யம்மையைச்
செஞ்சடைக் கற்றையின் வெண்ணிலா வைத்துத்
திகழ்புலி யூரி னடியரிடர் கெடுப்பா
னின்பத் தனிக்கூத் தியற்றிடு முதல்வனு
மளியன் குழகன் கடம்பணி யறுமுக
னுயர்கொடிச் சேவலன் சிவனருட் புதல்வனு
மறிவுநனி கிடந்த வுளத்தினர் வரத்தினர்
பழுதறு நாமலி முழுமணிப் புலவரு
மேனாண் முதலிடை கடையென மூன்று
நிலவிய கழகத் தலகற விளக்கிய
பான்மையி னாளிற் றான்குறை வெய்த
வாரியர் சொற்பல வம்ம ! வந் தடுத்துப்
பொருணயங் கெடுத்து மருணயங் கொடுத்துத்
தமிழ்தனி மையதோ வெனச்சிலர் மயங்கவுந்
தண்டமிழ் நூல்களிற் கண்டசொல் பலப்பல
வழக்கினில் வாரா வகைகிடந் திடவுஞ்
செய்தன வற்றை நொய்தினிற் களைமார்
விழைவுமிக் குற்றும் விழுத்தகு சிவநெறி
யுலகிடைப் பரப்புவா னூக்கமிக் குற்றுந்
தமிழ்மிக வளர்த்த புலவர்தஞ் செய்தியொடு
தத்துவ மிசைநூன் மெத்துசொற் பொருளெனாஅ
விலக்கண மிலக்கிய மியற்கையின் வளனெனாஅ
நவையிலா ராய்ச்சிக ணன்கனங் கிளக்குமாப்
பெரிதுநகை யுறுபு வரிசையின் விளக்கியு

மெழுந்தசீர் நங்காய்! இன்பம ரணங்கே!
பைந்தமிழ் குயின்ற செந்தமிழ்ச் செல்வீ !
சைவசித் தாந்தக் கழகத் தண்கட
னின்று நிவந்த குன்றாப் பெருமையை !
ஓராட்டைப் பருவ முற்றனை ; யொள்ளிய
பன்னிரு பரலுடைப் பண்புறு சிலம்பொன்று
பெற்றனை ; யிரண்டாஞ் சிலம்புபெற வெழுந்தனை ;
தமிழ்மொழி வடமொழி சாற்றுமங் கிலமொழி
முதலிய முற்றப் பயின்றபே ரறிஞரைச்
சிவநெறி நூல்வளந் தேங்குசிந் தையரை
மறையென விரிவுரை குயிற்றுமாண் புடையரை
யன்பரு ளறம்புக லார்வலர் தம்மை
மருத்துவ நூன்முறை தெரிக்குநுண் ணியரை
மேனாட்டார் நூனலம் விளம்புவல் லாரைத்
தொழின் முறை கூறுந் தூயரை நினக்குச்
செம்பொருள் பொறிக்குந் திருவுறுப் பினரெனக்
கொண்டனை நினையாங் கோதறு செல்வமாப்
பண்டைவினைப் பயனாற் கண்டனம் பெற்றுச்
சிவனடி வழுத்தி யவனரு ளிருந்தவா
றிற்றென மகிழ்ந்து நிற்றிறம் படித்து
மயலினை வீட்ட வந்தவான் கதிரெனப்
பெரிது நினைந்தன மரியதெள் ளமிழ்தே !
நின்வழிப் பல்பொரு ணிறுத்திடு மன்பர்கள்
வாழிய வுலகிடை வளனொடு மினிதே
பெயர்விழை யாத பெருங்குண முடையான்
தமிழ்த்தாய்க்குக் கடமை பூண்ட தமிழ்மகன்
வான்மீ கருநற் கம்பரு மெனப்பொருள்
குறித்தா ரியநலங் குலவிடு தமிழ்நலங்
கூறிய வாண்டகை குறிக்கொளு முகந்தான்
ஆரியச் சொல்லென மாறுபட் டார்சில
ரெனினிஃ தின்றமிழ்ச் சொல்லென வுணருமா
விளக்கிய மேலோன் மேனாட்டுச் சொற்பல

தமிழிற் பெயர்த்துத் தந்திடும் புலவோன்
இன்னுமொழி யாய்ந்து நின்வழித் தருகுவ
னென்னயா னம்பினன் அன்னனும் வாழிய
௬௫ தீம்பொருள் பொதிந்த திருத்தகு கன்னிநீ
வாழிய சிறந்தே வாழிய சிறந்தே
யுலகினி லென்று முயர்வொடு
௬௮ வாழிய பல்கலை வழங்கிய திகழ்ந்தே.

தமிழகம், மு. நல்லதம்பி
கொழும்பு

---

# கிரேக்க தத்துவ ஆராய்ச்சி

(முதற் சிலம்பு உ௭௬-ம் பக்கத் தொடர்ச்சி)

## ஸோபிஸ்தர்கள்

இம் முயற்சியால் பெரிய சித்தாந்தங்கள் புதிதாய்த் தோன்றாவிடினும், பழைய சித்தாந்தங்கள் நுணுகி ஆராயப் பெற்றன. அவற்றில் பொதிந்துகிடந்த கருத்துக்கள் வெளிப் படுத்தப்பட்டதோடு பல சித்தாந்தங்களிலு முள்ள உயர்ந்த கருத்துக்களை ஒன்று சேர்த்தலால் ஒருவகைப் புதியவையான சித்தாந்தங்களுந் தலைகாட்டத் தொடங்கின. உண்ணல், உடுத் தல், நடத்தல், பொருதல் முதலிய சாமானிய சொல்களும் தத்துவ ஆராய்ச்சி முறையி லாராயப்பட்டன. இவ்வண்ணந் தத்துவ ஆராய்ச்சியானது மக்கள் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் நுழைந்ததன் பயனாக, நல்லவுந் தீயவுமான பல வேறு கோட்பாடுகள் அஞ்சாமல் வெளியிடப்பட்டன. கி. மு. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இவ்வியக்கம் வலுக் கொண்டது, இதற்கு ஒரு முக்கிய காரணம் 500—449 கி. மு. வில் கிரேக்கர்களுக்கும் பாரஸீகர்களுக்கும் நடந்த போர்களில் கிரேக்கர்கள் வெற்றியுற்றதும், அதேன்ஸ் என்னுங் கிரேக்கர்

தலைநகரமானது பல்வகை வளங்களில் செழிப்புற்றதோடு, பற் பல கலைகளிற் றலை சிறந்த புலவர் பெருமக்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கியதுமாகும். இவ் வசதிகளோடு குடியரசு முறையும் இருந்தமையால், அறிஞர்கள் தாராளமாய் ஆராய்ச்சி செய்தலும், தாம்கொண்ட முடிவுகளைப் பலர்க்கும் எடுத்துச் சொல்லலும் வரவரச் சாத்தியமாயின. சுதந்தர உணர்ச்சி அரசி யற் றுறையில் மட்டு மடங்கி நில்லாது அறிவொழுக்கக் கோட் பாடுகளிலும் நுழைந்துவிட்டது. பழைய கோட்பாடுகளை மறுத்தலில் அச்சம் குறைந்து போயிற்று. தத்தமக்குத் தோற்றியதே சரியென்று சாதிக்கப் பலர் துணிந்துவிட்டனர். இதே சமயத்தில், பல்கலைப் பழக்கத்தோடு சொல்வன்மையும் பெற்றுக் குடிகளைத் தம்வயப்படுத்திக் குடியரசில் தலைமை பூணவேண்டு மென்றும் வாலிபர் பலரைப் பிடர்பிடித் துந்தத் தொடங்கிற்று. ஆகவே இந்நோக்கம் நிறைவேறற்கேற்ற பயிற்சி தருவோர் வேண்டு மென்னு முணர்ச்சி தோன்றியது.

அதற்கேற்ற ஆசிரியன்மாரும் அகப்பட்டனர். அவர்களே **ஸோபிஸ்தர்கள்** எனப்படுவோர். "ஸோபிஸ்ட்" என்னுஞ் சொல் 'அறிவுந் திறமையு முடையோன்' என்னும் பொருளில் முதலில் வழங்கப்பட்டது, ஆனால் கி. மு. 5-ம் நூற்றாண்டின் பிற்பகுதிக்குள் இச் சொல், அறிவை விற்றுப் பிழைக்கும் ஒரு வகைக் கூட்டத்தாரைக் குறிப்பதாயிற்று.

* இவர்கள், கலையெலா முணர்ந்தோ மென்றும், கசடற உரைப்போ மென்றும், தத்துவத் தன்மையெல்லாஞ் சர

---

* பிளேட்டோ ஸோபிஸ்தர்களைப் பற்றி எழுதியதொரு சம் பாஷணையில் அவர்களைப் பின்வருமாறு வருணித்திருப்பதாக ஜேம்ஸ் பிளாம்பீல்ட் எழுதுகின்றார். ஸோபிஸ்தர்கள் 1 பொருளாசை பற்றிப் பணக்கார வாலிபரை வேட்டையாடுவோர்; 2 தத்துவ ஞானத் தைத் திரட்டி விற்கும் மொத்த வியாபாரிகள்; 3 அதையே கூறுபடுத்தி விற்கும் சில்லரை வணிகர்கள்; 4 தாமுண்டாக்கிய பொருள்களைத் தாமே விற்போர்; 5 விதண்டாவாத நாவன்மையில் மிக்க பயிற்சி யுடைய நாமள்ளர்கள்; 6 தாஞ் சொன்னதைத் தாமே மறுக்கவும், அவ்

தமா யறிவோமென்றும், வித்தகம் வியப்பப் பேசி வேறுவே றார்க்குச் சென்றங்கு, அரசியற் பதவிநாடி அணுகிய குமரர்கட்கு விரிவுரை பகட்டிற் செய்து மிகுபொருள் பெற்று மிக்க மேன்மையாய் வாழ்ந்து வந்தார்கள். புரோடா கோரஸ் என்னும் ஸோபிஸ்ட்டே முதன் முதல் விரி வுரையை விலைக்கு விற்க வழிகாட்டியவன். வாலிபர்களை அர சியற் றொழிலுக்குப் பயிற்றவேண்டி யிருந்ததால், ஸோபிஸ்தர் கள், யாப்பிலக்கணம் அணியிலக்கணம், விவாதமுறை, கட்டுரை வன்மை முதலியவைகளில் நல்ல தேர்ச்சி பெறவேண்டியது இன்றியமையாத தாயிற்று. அது பற்றியே அவர்கள் அரசியன் முறை சமுதாய ஒழுக்கம், புண்ணிய பாவ வேற்றுமை முதலிய வைகளையும், இலங்கியல் நிலையியற் பொரு ளியல்புகளையும் பற்றித் திட்டமான கொள்கைகளைக் கைக்கொண்டு முற்று முணர்ந்தவர் போன்று ஆடம்பரமாய்ப் போதிக்கலாயினர். மெய்கூறியோ பொய்கூறியோ வாதத்தில் தாம் மேற்கொண்ட கொள்கையை நாட்டி எதிரியைத் திகைக்கவைத்துத் தோற் கடித்துத் தம்மைப் பொதுஜனங்கள் மெச்சும்படி வெற்றி யுறுதலே தங்கல்விப் பயனாக மாணவர் கருதினர். மேற்கொள் ளும் பக்கம் நியாயமான தாயினுஞ் சரி அநியாயமான தாயினுஞ் சரி கொண்டதை நாட்டுவதே குறிக்கோள். இது கைவருதற்கு வழிகாட்டிகளே ஸோபிஸ்தர்கள். மேற் குறித்த புரோடோ கொராஸ், ஹிப்பியஸ், ஜார்ஜியஸ் என்பர் இவர்களிற் பேர் பெற்றவர்கள். வாலிபர்களை அரசியற்றுறையிற் செல்வாக் குடை யராக்குதலையே தலை நோக்காகக் கொண்ட விப் போலியா சிரியர்கள் இவ்வாறு தம்மறிவையும் பேச்சுத் திறனையும் விற்கப் புகுந்ததின் பயனாக, உண்மை நாட்டத்திலும் நல்லொழுக்கத்

---

வாறு செய்யப் பிறர்க்குங் கற்பிக்கவும், சிறிதுங் கூசாதவர்கள்; மக்க ளறிய வொண்ணாத் தெய்வ விடயங்களையும் இயற்கை நிகழ்ச்சிகளையும் குறித்தும் பல ஆராய்ச்சிகளை எழுப்பி வம்பு செய்பவர்கள் 7 தாம் உண்மை ஞானத்தை யணுவும் பெறாதிருந்தும் எல்லா மறிந்தவரென வாலிபர்கள் தம்மை மதிக்கும்படி பகட்டுரை கூறி மயக்குஞ் சொக்குப் பொடிக்காரர்கள்.

திலும், தெய்வங் கொள்கையிலும் மக்கட் கியல்பாயிருந்த பற்றுணர்ச்சியும் நன்மதிப்பும் பையத் தளர்ந்தன.

* 'தம்மறிவை வருந்திப் பண்படுத்திய இவர்கள் இப்படிச் செய்ய எவ்வா றொருப்பட்டனர்.' இவர் தாம் பொருளாசையால் ஒருப்பட்டாலும், கேட்போரனைவருமா உண்மை நாட்டத்தை அறவே யொழித்து இவர் மாயவலையில் எளிதாய் வீழ்ந்து விட்டனர்? என்று இதை வாசிப்போர் எண்ணலாம். இதற்குச் சமாதானஞ் சிறிது கூறுவோம்.

உண்மையை மக்கள் ஒருநாளும் அறிய முடியாதென்பது ஸோபிஸ்தர் போதனைகளில் ஒன்று. இதற் காதாரமாக, பண்டைத் தத்துவ ஆராய்ச்சி வல்லார் பிரபஞ்ச மூலத்தைப் பற்றிப் பேசுங்காலத்து ஒருவர் அது நீரென்ன மற்றொருவர் அதை நெருப்பென்ன, பிறிதொருவர் நிலனென்ன இப்படிப் பலவாறு கூறித் தம்முள் மாறுபட்டதையும், இலக்கமும் மாறுதலுமே உண்மையென் றொரு சாராரும் அவையின்மையே மெய்ம்மை யென மற்றொரு சாராருங் கூறினதையும், ஸோபிஸ்தர்கள் எடுத்துக்காட்டி தனிமுதற் றத்துவப் பொருள் எவ்வாறிருக்கின்ற தென்பதை மக்கள் தம்மறிவால் ஒருநாளும் அறிய முடியா தென்று சாதித்தனர். 'அப்படியாயின் நாம் அறிவதெல்லாம் உண்மையல்லவோ' என்றார்க்கு, 'அவனவன் அறிவது அவனவனுக்கு மட்டும் உண்மையாகலாம், எல்லோரும் ஒத்துக்கொள்ளத் தக்க உண்மையை எம்மனிதனும் காண முடியாது' என்று போதித்தனர். இதன்படி உண்மை நாடும் விஷயத்தில் அவனவனறிவே அவனவனுக்குக் கட்டளைக்கல்லும் வழி காட்டியுமாம்! பிறமக்க ளறிவனுபவங்கட்கும் ஆன்றோர் அநுபவ நூல்கட்கும் யாதொரு மதிப்புந் தருதல் முறை கேடு மாகும்! இச் சித்தாந்தத்திற்கு இசையவே, யாவரையுங் கட்டுப் படுத்து முரிமையுடைய ஒழுக்கமுமில்லை யென்று சாதித்தனர்.

---

* இத்தகைய கொள்கைகளுக்குப் போதிய உதாரணங்கள் பிளேட்டோ எழுதிய ரிபப்ளிக் என்னும் நூலில் உள்ளன.

அஃதாவது யாவர்க்கு மொப்புமாறு மக்களறிவிற்கு மெய்பொய் வேற்றுமை எப்படித் தோற்றுமோ, அப்படியே யாவர்க்கும் பொதுவான நன்மை தீமைப் பாகுபாடுமில்லை யென்றனர். 'பொதுவாக மனச் சான்றில்லையோ' என்றால், 'அதுவும் ஒரே விஷயத்தைப் பற்றி வெவ்வேறு மக்களுக்கு வெவ்வேறு கருத்தை விளைவித்தலால் பயன்படாது' என்றனர். பின்பு 'முடிபுதான் என்னை?' என்றார்க்கு, 'ஒழுக்க விதிகள் என்பன மனிதர் செய்த செயற்கைக் கட்டுப்பாடுகள். சில வலியோராலும் சில மெலியோராலும் தத்தம் சொந்த நலங்கருதிச் செய்யப் பட்டவை. முறைப் படிபார்க்குமிடத்து எவனெவனுக்கு எது சரியென்று தோன்றுகிறதோ அவனவனுக்கு அதுவே சரி. யாவரும் ஒத்துக்கொள்ளக் கூடியதும் யாவரையுங் கட்டுப் படுத்தக் கூடியதுமான ஒழுக்கமென்ப தொன்றில்லை' என்று சாதித்தனர்.

(தொடரும்)

S. சச்சிதானந்தம் பிள்ளை, B.A., L.T.

---

# மதிப்புரை

'திலகவதியார்' இதனை ஆக்கியோர் திருச்சி, பிஷப் ஹீபர் ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் மு. நடேச முதலியார் அவர்கள். இந்நூல் 'தமிழகத்துத் தாய்மார் வரலாறு' என்னும் வரிசையில் முதன்மை பெற்றுள்ளது. இதன்கண் அம்மையாரது வரலாறு சிறுசிறு வாக்கியங்களால் இனிய செந்தமிழ் நன்னடையில், கற்பவர் மனத்திற் பசுமரத்தாணிபோற் பதியுமாறு எழுதப்பட்டுள்ளது. உரைநடை பயில விரும்புவார்க்கு இஃது ஒரு சிறந்த கருவியாகும். இவ்வரிசையின்கண் வெளியிடக் கருதியிருக்கும் எஞ்சிய வரலாறுகளையுந் திரு. முதலியாரவர்கள் விரைவில் வெளியிட்டுத் தமிழுலகுக்குப் பயன்படுத்த எல்லாம் வல்லஇறைவன் இன்னருள் புரிவானாக!

'உதயணன் சரிதம்' இதனை இயற்றியோர் மகிபாலன்பட்டி வித்துவான் மு. கதிரேசச் செட்டியாரவர்கள். வட மொழியின் கண்ணுள்ள இச்சரிதத்தை யாவரும் எளிதில் படித்துணரு மாறு இனிய செந்தமிழ் நடையில் இவர்கள் இயற்றியுள் ளார்கள். இதன்கண் இடையிடையே இடத்திற்கேற்ப நீதி வாக்கியங்களைக் கூறியிருப்பதும் ஒவ்வொரு பகுதியின் இறுதி யிற் கதையின் கருத்தை அழகிய வெண்பாக்களால் விளக்கியிருப் பதும் பாராட்டற்பாலன. இவர்களுக்கு செய்யுட்களாகவே நூல்களியற்றும் திறமை மிக்கிருந்தும் தமிழுலகிற்குத் தற் போழ்து பயனபடுவன உரைநடை நூல்களேயாமென்ற உண்மை நோக்கத்தால் 'உதயணன்', 'சுலோசனை' போன்ற உரைநடை நூல்களியற்றியமையும், வேறுபல இயற்றவிருக்கும் பான்மை யும் தமிழகத்தை மகிழ்விக்கின்றன. இவர்கள் எண்ணிய காரியங் களை எண்ணியாங்கு இனிது பெற இறைவன் முடித்துவைப் பானாக! விலை அணா 8

கிடைக்குமிடம்:—

சன்மார்க்க சபை, மேலைச்சிவபுரி (புதுக்கோட்டை)

'ஈமான்' இதன் ஆசிரியர் சென்னை பா. தாவூத்ஷா அவர் கள். இஸ்லா மார்க்கத்தை நன்கு விளக்குவதிந்நூல்.

விலை அணா 4

கிடைக்குமிடம்:—

அமிர்த கலாநிதி புக் டிபோ, சென்னை.

'பெரியபுராண ஆராய்ச்சி'

இதனை இயற்றியவர் சென்னை, கிறித்தவகலாசாலைத் தமிழா சிரியர் வா. மகாதேவ முதலியாரவர்கள். பெரிய புராணம் படிக் கப்புகுவார்க்கு இது சிறந்த முன்னுரை நூலாகும். அன்றித் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் போற்றத்தகுந்த அரிய நூலுமா கும். இத்தகை ஆராய்ச்சி நூல்கள் பல நமது தமிழகத்தின்கண் தோன்றிவருவதைத் தமிழ் மக்கள் போற்றுவாராக. விலை ரூ 1-4

---

Printed at the Sivakami Vilasam Press, Published by V. Subbiah for the S.I.S.S.W.P. Society Ltd., 306, Linga Chetty St. Madras.